பக்கங்கள்: 13

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 20 வியாழக்கிழமை 05.11.2020 கதிர் 361

### இது ரகசியம் அல்ல!

ஆட்சியில் – அதிகாரத்தில் – இருப்பவர்கள் சட்டத்தை மீறினால் குற்றமில்லை, தவறில்லை –இது தான் இலங்கையில் நியதி.

அதிகாரத்தில் இருப்போர் சட்டத்துக்கு மாறாக நடந்தால் பல சமயங்களில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை பக்கம் 02

# கடுமையான போட்டி!



## பைடனா? ட்ரம்பா?



### இறுதிக் கட்டத்தில் இறுக்க நிலை

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நேற்று முன்தினம் முடிவடைந்த நிலையில், வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பித்துத் தொடர்ந்து நீடிக்கின்றது. இறுதிக் கட்டத்திலும் மிக நெருக்கமான நிலையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனும், குடியரசுக் கட்சி வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான டொனால்ட் ட்ரம்பும், 'நீ முந்தி, நான் முந்தி' என்ற அளவுக்கு மிக நெருக்கமாகக் கடுமையாகப் போட்டியிடும் சூழல் நீடிப்பதாக அறிவிக்கப்படுகின்றது. பக்கம் 02

# கொரோனாவை எதிர்த்து வாழுங்கள்; நாட்டை முடக்கி வைக்கவே முடியாது!

### ஜனாதிபதி கோட்டா திட்டவட்டம்



கொரோனா வைரஸை ஒழிப்பதற்குத் தீர்வைக் கண்டறியும் வரை நாட்டை முடக்கி வைக்க முடியாது. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி அனைவரும் நாளாந்தச் செயற்பாடுகளை வழமை போன்று முன்னெடுக்கத் தயாராக வேண்டும்.

– ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா ஒழிப்பு விசேட செயலணிக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பக்கம் 02

## சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கொரோனாத் தடுப்புக்கான வழிகாட்டல்

### வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் பணிப்பு



வடக்குமாகாணத்தில்அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கொரோனாத் தடுப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றுவதை உறுதிசெய்வதோடுவிழிப்புணர்வையும் மேற்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

வடக்குமாகாணத்தில்கொரோனாத் தொற்று இடர் தொடர்பான மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் பக்கம் 11



## சுடரேற்ற அனுமதியுங்கள்! ஜனாதிபதி கோட்டாவுக்கு சிறீதரன் எம்.பி. கடிதம்

(விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்...)

## யானையுடன் மோதிய மோ.சைக்கிள் சாரதியைத் தாக்கிக் கொன்றது அது!

மாங்குளம், நவ.04

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் மல்லாவி வீதியில் மாங்குளம் நகர் பகுதியில் இருந்து முதலாவது கிலோமீற்றர் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். பக்கம் 02

## பேலியகொட கொரோனா கொத்தணி பரவலுக்குப் பணத்தாளே காரணமாம்

இலங்கையில் கொரோனா வைரஸ் நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக் காரணமாக இருந்த பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் எப்படி வைரஸ் பரவியது என்பது கண்டறியப்பட்டுள்ளது. பக்கம் 02

## கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் 18 கொரோனா நோயாளிகள் சேர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில்கொரோனா சிகிச்சை வைத்தியசாலையாக மாற்றப்பட்டுள்ள கோப்பாய் தேசியக் கல்வியியற் கல்லூரியில் 18 கொரோனா நோயாளிகள் நேற்று சேர்க்கப்பட்டுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நாட்டில்கொரோனா தாக்கம் அதிகரித்து பக்கம் 02

## நேற்றும் 443 பேருக்கு கொரோனாத் தொற்று

### 12 ஆயிரத்தைக் கடந்தது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் நேற்று 443 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஒரு மாதத்தில் மினுவாங்கொடை மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் பக்கம் 02

## கொரோனாத் தொற்று உறுதியான 2 பேர் சாவு

### ஒருவரது மரணமே கணக்கில் சேர்ப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நிலையில் வயோதிபர்கள் இருவர் உயிரிழந்துள்ள நிலையில் ஒருவரது மரணத்தையே கொரோனா மரணமாக அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

கொழும்பு – 13 ஐச் சேர்ந்த 79 வயதுடைய பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டில் உயிரிழந்த நிலையில் பிரேத பரி பக்கம் 02

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கூட எடுக்கப்படுவதில்லை.

2015 இல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தம், கடந்த வாரம் சபாநாயகர் அரசமைப்பின் இருபதாவது திருத்தச் சட்டத்தில் ஒப்பமிடும் வரை நடைமுறையில் இருந்தது.

அதன்படி – 19ஆவது திருத்தத்தின்படி – அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் சமயம் பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்குப் பிறகு, அடுத்த பதவிக் காலங்களில் வரும் ஜனாதிபதி ஒருவர் ஏதேனும் அமைச்சுப் பதவியைத் தன் வசம் வைத்திருக்க முடியாது.

கடந்த வாரம் இருபதாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் வரை இதுதான் நிலைமை.

ஆனால், கடந்த ஆண்டு நவம்பரில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த வாரம் இருபதாவது திருத்தம் நடைமுறைக்கு வரும் வரையிலும் – ஏன் இப்போதும் – பாதுகாப்பு அமைச்சைத் தன் வசம் வைத்திருந்தார். வைத்திருக்கின்றார். ஒரு முன்னாள் படை அதிகாரியை அந்த அமைச்சுக்குச் செயலாளராக நியமித்து அதன் மூலம் அந்த அமைச்சை நடத்தினார்.

நாட்டின் சட்டத்துக்கு – உயர் சட்டமான அரசமைப்புக்கு – முரணாக, பாதுகாப்பு அமைச்சையே வேறு யாருக்கும் கையளிக்காமல் சுமார் ஒரு வருட காலம் ஜனாதிபதியே கையாண்ட போது அதற்கு எதிராக எவரும் நீதிமன்றத்துக்குப் போகவேயில்லை என்பதுதான் இதில் பெரும் துன்பியல் நிலைமையாகும். அவ்வளவு பயம், கெடிக் கலக்கம் – ஏனைய அரசியல்வாதிகள், தரப்புகளுக்கு இதற்கு எதிராக நீதிமன்றத்துக்குப் போவதற்கு. அதனால்தான் கடந்த ஒரு வருட காலமாக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டமையை எவரும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தவில்லை. 19ஆவது திருத்தம் மூலம் அந்த ஏற்பாட்டை – ஜனாதிபதி அமைச்சுக்களைத் தம்வசம் வைத்திருக்க முடியாது என்ற ஒழுங்குமுறையை – சட்டமாக்கிய தரப்புகள் கூட நீதிமன்றுக்குச் செல்லப் பயந்து முடங்கியிருந்தன.

இப்போதும் அது போல அரசமைப்புக்கு மாறான – சட்டத்துக்கு முரணான – காரியம் ஒன்று நடந்தேறப் போகின்றது. அதையும் கூட சட்டச் சவாலுக்கு உட்படுத்துவதற்கு முதுகெலும்புள்ள தரப்புகள் இல்லைப் போன்றே தோன்றுகின்றது.

பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாகி, பின்னர் அமைச்சுப் பதவியை ஏற்கும் விவகாரம்தான் அது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் உயர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட முடியாது என்ற 19ஆவது திருத்த ஏற்பாடு, புதிய இருபதாவது திருத்தம் மூலம் மாற்றீடு செய்யப்பட்டாலும் கூட, பஸில் ராஜபக்ஷ எம்.பியாவதற்கு மேலும் பல புதிய சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்படுவது அத்தியாவசியமானது என்று இப்பத்தியில் நான் ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தேன்.

அந்தச் சட்டத்தடையை எல்லாம் தூக்கிக் கடாசி விட்டுத் தன்பாட்டில் பதவியேற்க பஸில் தயாராகி விட்டார் என்றும், அதற்கு அவர் சகோதரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பச்சைக் கொடிகாட்டி விட்டார் என்றும் தெரிகின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் நிற்க முடியாது என்ற அரசமைப்பின் 19ஆவது திருத்த ஏற்பாட்டையும் உள்ளடக்கித்தான் 2020 பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதனால் அந்தத் தேர்தலில் பஸில் ராஜபக்ஷ ஒரு வேட்பாளராக் கூடப் பெயர் குறிப்பிட முடியாத நிலைமையே அப்போது இருந்தது.

2020 பொதுத் தேர்தலில் ஏதேனும் ஒரு கட்சி சார்பில் கூட தேர்தலில் நிற்காதவரை எந்தக் கட்சியும் தமது தேசியப் பட்டியல் வெற்றிடத்துக்கான எம்.பியாக நியமிக்க முடியாது என்பது தெளிவானது.

ஆனால், இது தொடர்பான சட்டவிதிகளை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு தம்பாட்டில் பஸிலை பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கவும் –

அவர் எம்.பியாகப் பதவியேற்றதும் அவருக்கு நிதி அமைச்சர் பொறுப்பை வழங்கவும் –

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தயாராகி விட்டார் என்றும் தெரிகின்றது.

கடந்த பொதுத் தேர்தலில் ஒரு வேட்பாளராக கூட இல்லாத பஸில் ராஜபக்ஷவை தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிப்பது சட்ட விரோதமானது என வழக்குத் தொடர ஏதேனும் கட்சிக்காரர்கள் கொழும்பில் தயாரா?

தெரியவில்லை. சஜித்தின் கட்சியோ, மாற்றுக் கொள்கைக்கான மையம் போன்ற – பொது அமைப்புக்களோ – இது விடயத்தில் நடவடிக்கை எடுப்பது மிகப் பொருத்தமாக இருக்கும். செய்வார்களோ, துணிவு இருக்குமோ தெரியவில்லை.

★ ★ ★

கொரோனாத் தொற்றுத் தடுப்பு விடயத்தில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டி பொறுப்புடன் செயற்பட்ட ஊடகங்களைப் பாராட்டியிருக்கின்றார் ஊடகத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

நல்ல விடயம்தான். ஆனால் இந்த விவகாரத்தில் ஊடக நிறுவனங்கள் – நாம் – எவ்வளவு பொறுப்புடன் நடந்து கொள்கின்றோம் என்பது கேள்விக்குறியே.

யாழ். நகரப் பகுதியில் இரவிலும் திறந்திருக்கும் ஒரு கடை சில நாள்களாகப் பூட்டியிருந்தது. என்ன, ஏது என்று விசாரித்தேன். கொழும்பில் இருந்து பஸ்ஸில் வந்து யாழ்ப்பாணத்தில் இறங்கிய ஒரு பயணி பின்னர் கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டாராம். பஸ்ஸில் வந்து இறங்கிய சமயம் அவர் அந்தக் கடையில் வெற்றிலைக் கூறு வாங்கினாராம். அவர் அந்தக் கடைக்கு வந்து சென்றமையால் கடையைப் பூட்டச் செய்து விட்டார்களாம் சுகாதார அதிகாரிகள். நல்லது. இனி, விடயத்துக்கு வருகிறேன்.

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் மீது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்ற சமயம் அந்தச் செய்தியைச் சேகரிக்க சென்றிருந்த சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களில் ஐவருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியிருக்கின்றது. அந்த நிகழ்ச்சிக்குச் சென்றிருந்த செய்தியாளர்கள், ஊடக நிறுவனப் பணியாளர்களை உடனடியாகத் தனிமைப்படுத்தலுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

அந்த ஊடகவியலாளர்களின் விவரங்களை அறிவதற்கு சுகாதாரப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டால் சரியான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று அதிகாரத் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பணியாளரை வீட்டுக்கு அனுப்பி விட்டோம், வீடுகளில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர், அவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்றெல்லாம் கூறுகின்றார்களே தவிர, சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் விலாசம் மற்றும் விவரங்களைத் தெளிவாகத் தருகின்றார்கள் இல்லையாம் என்பது சுகாதாரத் துறையினர் கூறும் குறையாக உள்ளது. என்ன, ஏது என்று விசாரித்துப் பார்த்தால், அதற்குள்ளும் ஒரு குயுக்தித்தனம் பொதிந்திருப்பது தெரியவந்தது.

இருபதாவது திருத்தம் நிறைவேற்றபட்ட நாளுக்குப் பின்னர், சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களுக்குத் தொற்று இருக்கின்றமை கண்டு பிடிக்கப்பட்ட காலம் வரை அந்த ஊடகவியலாளர்கள் தத்தமது ஊடக நிறுவனங்களுக்கு வந்து தினசரி பணியாற்றிச் சென்றுள்ளனர். தப்பித் தவறி அந்த ஊடகவியலாளர்களை அதிகாரிகள் சரியாக விசாரித்தால், அந்த ஊடக நிறுவன அலுவலகத்துக்கே சீல் வைத்து மூடிவிடுவார்கள் என்ற அச்சம் நிறுவனத்துக்கு அத்தகைய நெருக்கடி ஏழாமல் தவிர்ப்பதற்கே தொற்றுக்குள்ளான ஊடகவியலாளர்களை அதிகாரிகள் அதிகம் விசாரிக்காமல் பார்த்துக் கொள்ளும் ஏற்பாடாம்...!

ஒரு வெற்றிலைக் கூறைத் தொற்றுக்கு உள்ளானவருக்கு விற்ற 'குற்றத்துக்காக' இங்கு ஒரு கடையையே மூடிவிட்டார்கள். தொற்றுக்குள்ளான ஊடகவியலாளர்களை வைத்து வேலை செய்த ஊடக அலுவலகங்களுக்கு நடவடிக்கை ஏதுமில்லை.

ஊடகங்கள் என்றாலேயே தனிமரியாதை என்று நாங்கள் மார்தட்டிக் கொள்வது இதைத்தானோ...!

– மின்னல் –

## நேற்றும் 443...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 691 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 187 ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில் 6 ஆயிரத்து 305 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 5 ஆயிரத்து 858 பேர் குணமடைந்து வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

## கோப்பாய் சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நிலையில் மேற்படி ஆசிரியர் கல்லூரி தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நாடு முழுவதும் அதிகரித்து வருகின்ற கொரோனாத் தாக்கத்தையடுத்து இந்தக் கல்லூரியை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ள மேற்படி கல்லூரியில் தற்போது கொரோனா சிகிச்சை வழங்கும் செயற்பாடுகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலைமையில் குறித்த சிகிச்சை நிலையத்தில் நேற்று 18 கொரோனா நோயாளிகள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த 18 பேர் தற்போது சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மேலும் கூறினார்.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டு கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. இதன் தொடராகவே தற்போது கோப்பாய் கல்வியற் கல்லூரியும் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேலியகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணத்தாள் மற்றும் மீனவர்களால் சத்தமிடும்போது வெளியாகும் எச்சில் போன்றவற்றால் கொரோனா பி – 1.42 ரக தொற்றுப்பிரிவு பரவியிருக்கின்றது என்று சுகாதார அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை கொரோனா கொத்தனி கடந்த மாதம் 3ஆம் திகதி பரவ ஆரம்பித்தது.

எனினும், அதனை மிஞ்சிய பேலியகொட மீன்சந்தை கொத்தணி கடந்த மாதம் 21ஆம் திகதி பரவ ஆரம்பித்து இன்றுவரை பாரிய அளவில் வியாபித்து வருகின்றது.

## யானையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தச்சு வேலைக்காக முல்லைத் தீவு மல்லாவி கொல்லவிளாங்குளம் பகுதிக்கு வந்து வேலை புரிந்து வந்த நிலையில் செவ்வாய் இரவு 10.15 மணி அளவில் தனது வேலையை நிறைவு செய்து கொடிகாமத்தில் உள்ள வீட்டுக்குத் கொண்டிருந்துள்ளார்.

மாங்குளம் நகர்ப்பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இரவு 10.30 மணியளவில் திடீரென வீதியை குறுக்கறுத்த யானையுடன் மோதி அவர் விபத்துக்குள்ளானார்.

யானை மோட்டார் சைக்கிள் மீதும் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த நபர் மீதும் கடும் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இந்த தாக்குதலில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் 37 வயதுடைய 9 பிள்ளைகளின் தந்தையாகிய செட்டியா வெளி, பெரிய நாவலடி, கொடிகாமம், யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த ஆனந்தராசா விஜியானந்தன் என்ற நபரே உயிரிழந்துள்ளார். அவர் அண்மையிலேயே 9வது ஆண் பிள்ளைக்கு தந்தையானார்.

## கடுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தமுள்ள 538 பிரதிநிதிகள் தெரிவில் 270 பிரதிநிதிகள் ஆதரவைப் பெறுவரே வெற்றியீட்டியவராக அறிவிக்கப்படுவார். இதுவரை வெளியான முடிவுகளில் ஜோ பைடனுக்குக் ஆதரவாக 248 பிரதிநிதிகளும், ட்ரம்புக்கு ஆதரவாக 214 பிரதிநிதிகளும் தெரிவாகியுள்ளனர். எஞ்சியுள்ள 76 இடங்களுக்கான வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து வருகையில் போட்டி மிகக் கடுமையாக இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் 48 மாநிலங்களுக்கும் அவை தெரிவு செய்யும் பிரதிநிதிகள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி 48 மாநிலங்களும் சேர்ந்து 538 பிரதிநிதிகளைத் தெரிவு செய்வர். இந்த 538 பிரதிநிதிகளே அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்வார்கள்.

அதிபராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு 270 பிரதிநிதிகளின் ஆதரவு தேவை.

இதில் இன்னொரு விடயமும் உண்டு.

ஒரு மாநிலத்தில் ஒரு வேட்பாளர் அதிக வாக்குளைப் பெற்றால் அந்த மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட பிரதிநிதிகள் அனைவரும் அவரது கட்சியினராக இருப்பர்.

இந்த அடிப்படையில் இதுவரை எண்ணப்பட்ட மாநிலங்களில் 248 பிரதிநிதிகள் ஜோ பைடன் பக்கத்திலிருந்து தெரிவாகியுள்ளனர்.

அதிபர் டிரம்ப் தரப்பிலிருந்து 214 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஜோர்ஜியா (16 இடங்கள்), நிவோடா (16), வடகரோலினா (15), பென்ஸில்வேனியா (20), விஸ்கொன்ஸின் (10) முதலிய மாநிலங்களில் இருந்து இன்னும் இறுதி முடிவுகள் வரவில்லை.

எனினும், ஜோ பைடன் தமக்கு இன்னும் தேவைப்படும் 22 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெறக் கூடிய சாத்தியம் தென்படுவதாக சில ஊடகங்கள் செய்தி வெளிவிட்டன. (உ)

## கொரோனாத் தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனையின்போது அவருக்குக் கொரோனாவைரஸ் தொற்று ஏற்பட்டிருந்தமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகால நோயினால் பீடிக்கப்பட்டிருந்த குறித்த பெண் சுமார் ஒரு மாதத்துக்கும் அதிகமாக வீட்டிலேயே இருந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

அவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பால் ஏற்பட்ட மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்று பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவரது மரணம் இலங்கையில் 24 ஆவது கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட மரணமாகப் பதிவாகியுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, கொழும்பு 13 ஐச் சேர்ந்த 78 வயதுடைய நபர் ஒருவர் வீட்டில் தவறி விழுந்ததில் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக கடந்த திங்கட்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

குறித்த நபரின் மரணம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த நபரின் மரணம் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்படாத காரணத்தால் அதனைக் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட மரணமாகக் கருத முடியாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொரோனாவை எதிர்த்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது: –

சுகாதார அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுடன் இருந்த போதிலும் அவர்களுக்குத் தொற்று ஏற்படாமைக்குக் காரணம் அவர்கள் உரிய சுகாதார வழிமுறைகளைப் கடைப்பிடிப்பதேயாகும்.

அவர்களைப் போல் சுகாதார வழிமுறைகளை ஏனையோரும் கைக்கொண்டால் நாட்டை சிறப்பான முறையில் முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும். முக்கியமாக மக்கள் சுகாதார வழிமுறைகளை உரியவாறு கடைப்பிடித்தால் நாட்டை முடக்க அவசியமில்லை.

நாட்டை முடக்கி வைத்திருந்தால் அன்றாடம் உழைத்து வருமானம் பெறுபவர்களின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, குறிப்பிட்ட ஒரு பிரிவினரை மாத்திரம் கவனத்தில் கொண்டு நாட்டை முடக்கி வைத்திருப்பது தொடர்பில் தீர்மானிக்க முடியாது. அனைத்துப் பிரிவினர் தொடர்பிலும் கவனம் செலுத்தி இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டும் – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சீ தொலவத்த, ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும், கொரோனா ஒழிப்பு விசேட செயலணியின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# சவூதி அரேபியாவிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை!

## ஜனாதிபதி கோட்டா முன்னெடுப்பு

சவூதி அரேபியாவில் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள இலங்கையர்களை 48 மணித்தியாலங்களுக்குள் அழைத்துவர ஜனாதிபதி உத்தரவின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய நடைபெற்ற சிறப்பு பணிக்குழுவின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையர்களின் வதிவிட மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்குக் கடும் பாதிப்புக் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

அந்நாட்டின் 150 பாதுகாப்பு இல்லங்களில் இவர்கள் தங்கியுள்ளனர். இவர்களை 48 மணித்தியாலங்களுக்குள் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை வழங்கியுள்ளார் என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒருநாளைக்கு இரண்டு விமான சேவைகளையேனும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி பணித்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களை ஒருநாளைக்குள் பி.சி.ஆர். பரிசோனைக்காக அனுப்பும் செயற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாகவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தப் பணிக்குழுவின் கூட்டத்தில் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குதல், நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகளை வீடுகளுக்குச் சென்று வழங்குதல், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்குப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொதியை வழங்குதல் முதலான விடயங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# 11 ஆயிரத்து 900 குடும்பங்கள் மேல்மாகாணத்தில் தனிமையில்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

நாட்டில் கொரோனா வைரஸ் பரவியதைத் தொடர்ந்து, மேல் மாகாணத்தில் 11 ஆயிரத்து 900 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் நோயாளிகளின் முதல் தொடர்புகளாக அடையாளம் காணப்பட்ட 5 ஆயிரத்து 715 குடும்பங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அத்தோடு, நோயாளிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தொடர்புகளாகக் கண்டறியப்பட்ட பின்னர் கிட்டத்தட்ட 6 ஆயிரத்து 199 குடும்பங்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக 14 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் 14 பேரின் தலைமையில் இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், நேற்று முதல் இந்தக் குழுக்கள் மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றன என்றும் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்பட்ட உத்தரவை மீறுவதாகக் கண்டறியப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழில் கடல்நீரேரி பெருக்கெடுப்பு வைத்தியர் யமுனானந்தா விளக்கம்



யாழ்ப்பாணம் கடல் நீரேரி அண்மைய பௌர்ணமி நாளில் தரைப் பகுதிக்குள் அசாதாரணமாக ஊடுருவிய காரணம் பற்றிய கருதுகோள் தொடர்பில் மருத்துவர் சி.யமுனா நந்தா தெளிவுபடுத்தியுள்ளார்.

இதுதொடரிபில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைத்தோற்றத்தின் அடிப்படையில் சுண்ணாம்புக் கற்பாறைகளால் ஆனது. இந்தப் பாறைகளுக்கு இடையே மழைநீர் பருவகாலங்களில் தேங்கி வில்லை போன்ற கட்டமைப்பில் காணப்படுகின்றது. இந்த வில்லை போன்ற மழைநீர் சேமிப்பின் எச்சங்கள், கடல்நீருடன் சமநிலையில் உள்ளன. கடல்நீர் பெருக்கெடுக்கும்போதும், வற்றும் போதும் சுண்ணாம்புப் பாறைகளுக்கு இடையேயான நீரும் தனது கொள்ளளவுக்கு ஏற்பவும் நீர் அமுக்கத்தைப் பகிரும். பௌர்ணமி தினங்களில் சந்திரனின் ஈர்ப்புசக்தி காரணமாகக் கடலலை எழுச்சி ஏற்படுவது வழமை.

மேலும் பூமியுள் உள்ள பார உலோகக் கருத்தாக்கங்கள் ஏற்பட்டு நிலநடுக்கங்கள், எரிமலைகள் ஆழ்கடலிலே ஏற்படலாம். அண்மைய பௌர்ணமி தினத்திலும், துருக்கி, காஷ்மீர் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டமை உணரப்பட்டது. இவையும் அரபிக்கடலில் சமுத்திர அலைகளைச் சீற்றம் கொள்ள வைக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வழமைக்கு மாறாக இம்முறை கடல் நீரேரி நிலத்தை ஊடறுத்ததுக்கு மேலும் ஒரு கருதுகோள் யாழ்.குடா நாட்டின் நிலக்கீழ் நீர் நிலையியல் அமுத்தம் வழமைக்கு மாறாகச் செயற்கையாக அதிகரித்திருக்கலாம். அல்லது நிலக்கீழ் நீர் நிலையியல் அமுத்தம் கடல்நீருடன் சமப்படுத்தப்படும் நிலை தடுக்கப்பட்டு இருக்கலாம். இதனால் பொங்கும் கடல் அலைகள் செலுத்தும் அமுத்தம் நிலக்கீழ் சுண்ணாம்புப் பாறைகளுக்கு ஊடாகச் செல்வதும் நிலக்கீழ் நீருக்கு ஊடாகச் செல்வது தடைப்பட்டு தரைமேல் ஊடுருவி இருக்கலாம். இதனை செய்மதிப்படலங்கள் மூலம் கண்டறியலாம்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு சுண்ணாம்புக் கற்பாறைகளுக்கு அதிக திணிவை அண்மைக் காலத்தில் கொடுப்பவை பிரமாண்டமான கட்டடங்களும், விசாலிக்கப்படும் வீதிகளும் ஆகும். இவற்றுக்காக இயற்கைக்கு மாறாகப் பெருமளவான கருங்கற்கள் எமது பிரதேசத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே இயற்கைக்கு மாறாக அதிக அளவில் கருங்கற்களைச் சுண்ணாம்புக் கற்பாறைகளால் அமைந்த மணற்றிட்டில் சேர்த்தால் கடல்நீர் மேலெழுவது வழமை யாகும்.

யாழ்ப்பாணம் நகரை அண்டிய பெரியளவிலான கட்டடங்கள், பண்ணைக் கடற்கரையில் மேற்கொள்ளப்பட்ட கடல்நிரப்பு நடவடிக்கைகள், பண்ணைக்கடல் அமைக்கப்பட்ட பெருந்தெருக்கள் என்பவற்றில் உள்ள கருங்கற்கள் கொடுக்கும் நிறையின் தாக்கம் நிலக்கீழ் கடலோட்டத்தைப் பாதிக்கும். இது தொடர்பாக கருதுகோள்களை விஞ்ஞான ரீதியில் கவனத்தில் எடுக்க வேண்டும்.

'இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்' என்பதை இயற்கை அன்னை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டே உள்ளாள்.- என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா தொற்றாளருடன் பயணித்தவர்களை இனங்காண்பதற்கு நீதிமன்றை நாடிய பொலிஸார்!

யாழில் கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய நபர்களுடன் பஸ்ஸில் பயணித்த ஆறு பேர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை இனம் கண்டு தனிமைப்படுத்த யாழ்ப்பாண பொலிஸார் நீதிமன்றை நாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 30 ஆம் திகதி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என அறியப்பட்ட வெள்ளவத்தை உணவக உரிமையாளர் மற்றும் அவருடன் பணியாற்றிய புங்குடுதீவைச் சேர்ந்த இருவர், வேலணையைச் சேர்ந்த ஒருவரும் என நால்வர் என்.சி.ஜி. பஸ்ஸில் கொழும்பிலிருந்து கடந்த 25 ஆம் திகதி இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டுள்ளனர்.

அவர்கள் நால்வரும் மறுநாள் 26 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்துள்ளனர். அங்கிருந்து உணவக உரிமையாளர் ஓட்டோவில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் உள்ள வீட்டுக்குச் சென்றுள்ளார். பணியாளர்களும் ஓட்டோவில் வேலணை, புங்குடுதீவுக்கு புறப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்துக்கு கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணிக்குப் புறப்பட்ட பஸ்ஸில் பயணித்தவர்கள் சமூக அக்கறையுடன் உடனடியாக சுகாதார அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டது.

அத்துடன் பஸ் சேவை நிறுவனத்திடமிருந்து பயணித்தவர்களின் அலைபேசி இலக்கம் பெறப்பட்டு சுயதனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் நேற்று முன்தினம் ஈடுபட்டனர். அவ்வாறு 37 பயணிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்.

சாரதியும் நடத்துநரும் கொழும்பில் தங்கியுள்ள நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். எனினும் அந்த பஸ்ஸில் பயணித்த 6 பேர் அலைபேசியை நிறுத்தி வைத்து தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் 6 பேரையும் கண்டறியும் பணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது.

கடந்த 5 நாள்களாக ஆறு பேரையும் கண்டறியும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டிருந்த போதிலும், அவர்களை கண்டறிய முடியாத நிலையில், தற்போது அவர்களின் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக அவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்களை தொடர்பு கொள்ள ஏதுவாக நீதிமன்றைப் பொலிஸார் நாடியுள்ளனர்.

# மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது பொருளாதார மத்திய நிலையம்!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளும் நேற்று (புதன் கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சின் செயலாளர், மேஜர்ஜெனரல் சுமேத பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இரத்மலானை, ஹோகந்தர, மீகொட, வெயாங்கொடைத மற்றும் நாரஹேன்பிட்டிய பொருளாதார மத்திய நிலையங்களின் செயற்பாடுகளே இவ்வாறு மீண்டும் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த மத்திய நிலையங்களில் சில்லறை வியாபாரங்கள் இடம்பெற மாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அரசின் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்போம்!

## உலக வங்கி உத்தரவாதம்

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை உலக வங்கி பாராட்டியுள்ளது.

அந்த வங்கியின் மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பாரிஸ் ஹேய்ட்ட சர்வோஸ் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினார்.

இலங்கையும் - உலக வங்கியும் பல வருடங்களாகப் பரஸ்பர நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றன என சர்வோஸ் சுட்டிக்காட்டினார். தற்போதைய தொற்றுப் பரவலை விரைவில் கட்டுப்படுத்த இலங்கையால் முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேசியத்துக்கு விரிக்கப்படும் வலை

**முன்னாள் இராணுவ அதிகாரியும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அரசின் சிவில் நிர்வாகக் கட்டமைப்பையும் கூட இராணுவப் பாணிக்கு மாற்றி வருகின்றார் என்ற குற்றச்சாட்டு வலிமையாகி வருகின்றமை தெரிந்ததுதான். முப்பத்தியைந்துக்கும் மேற்பட்ட சிவில் நிர்வாகப் பதவிகளுக்கு ஓய்வு பெற்ற – அல்லது சேவையில் இருக்கின்ற – படை அதிகாரிகளை நியமித்து, இராணுவக் கட்டமைப்புப் போன்றதாக அரச நிர்வாகத்தை மாற்றி வருகின்றார் அவர் என்பது வெளிப்படையானது.**

**இராணுவ விவகாரத்தில் ‘ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்தும்’ மற்றொரு கைங்கரியத்தை மிகத் தந்திரமாக – மிக சாமர்த்தியமாக – மிக நுட்பமாக – அவர் முன்னெடுக்கின்றார்.**

**வட மாகாணத்தில் இருந்து – யாழ்.மாவட்டம் மற்றும் வன்னிப் பெருநிலப்பரப்பில் இருந்து – ஒன்பதாயிரம் பேரை இராணுவத்துக்கு ஆள் திரட்டுவதாகக் காட்டிச் சேர்த்துக் கொள்ளும் அவரின் நடவடிக்கை இப்படி ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்தும் தந்திரம்தான்.**

**இலங்கை இராணுவத்தைப் பொறுத்தவரை அதனைத் தமிழ் மக்கள் தங்களின் இராணுவமாகவோ, தமது தேசத்தின் இராணுவமாகவோ நோக்கும் நிலைமை இதுவரை இல்லை. அதனை சிங்கள இராணுவமாகவும், தமது தேசத்தை அடக்கி, ஆக்கிரமித்துள்ள இராணுவமுமாகவே அவர்கள் பார்க்கின்றார்கள்.**

**இலங்கை இராணுவத்தின் இதுவரை காலமான ஆள் திரட்டலும், அதன் நடவடிக்கைகளும் தமிழர்களின் இந்தக் கருத்து நிலைப்பாட்டை உறுதிப்படுத்துபவையாகவே எப்போதும் இருந்து வந்திருக்கின்றன.**

**இலங்கை இராணுவத்தில் உள்ள தமிழர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் அதனை ‘சிங்கள இராணுவம்’ என்று தமிழர்கள் ஒட்டு மொத்தமாகக் கருதுவதின் அர்த்தம் அப்பட்டமாகும்.**

**இலங்கை இராணுவம் ஒன்றிரண்டு வீதம் கூடத் தமிழர்களைத் தனது படைக்குள் சேர்க்கவில்லை. அதுவும் அதிகாரிகள் தரத்தில் தமிழர்கள் உள்வாங்கப்படுவதேயில்லை என்று கூறலாம்.**

**ஆகவே, அப்படி ‘சிங்கள இராணுவம்’ என்ற பெயரெடுத்த தரப்பின் ‘லேபிளை’ மாற்றியமைக்கும் நடிப்பாக ஒன்பதாயிரம் வடக்குத் தமிழர்களை இராணுவத்துக்குத் திரட்டும் படம் காட்டப் படவிருக்கின்றது. இத்தகைய ஆள் திரட்டல் மூலம் இலங்கை இராணுவத்தில் தேசிய இனவிகிதாசாரம் சரிவரக் கடைப்பிடிக்கப் படுகின்றது என்பதைக் காட்டுவதற்கான முன் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.**

**இராணுவத்தில் தமிழர்களுக்கு இடம் கொடுத்தாலும் தச்சன், மேசன் என்ற உடலுழைப்புத் தொழிலாளிகள் நியமனம்தான். கடை நிலை ஊழியர் பதவி நிலைதான்.**

**அறுபதாயிரம் ரூபா என்ற சம்பள ஆசையைக் காட்டினால், பெரும் எண்ணிக்கையில் தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் கடை நிலையிலும் சேர்வார்கள் என்று கோட்டாபய அரசு நம்புகின்றது.**

**அப்படி இளைஞர்கள் சேர்ந்து கொண்டால், தமிழ்த் தேசியம், அந்தத் தேசியத்தின் அடையாளமான தனித்துவமான மொழி, கலாசாரம், விழுமியங்கள், பண்பாடு, வாழிடம், வாழ்க்கை முறை போன்றவை பற்றிய ஈடுபாடுகளையும் தீவிரத்தையும் தமிழர்களின் இளம் தலைமுறை மறந்து விடும். மறந்து விடுவது மட்டுமல்லாமல், சிங்கள இராணுவம் என்ற யதார்த்தக் கட்மைப்புக்குள் தமிழ் இளைஞர் சமுதாயம் ஒன்றித்துக் கலந்து, கரைந்து விடும், அதனால் தமிழ்த் தேசியம் என்ற தனித்துவமான சிந்தனைப் போக்கு தமிழர்கள் மத்தியில் – அவர்களின் மூளை மையத்திலிருந்து – நிரந்தரமாக அடிபட்டுப் போகும் என்று கோட்டா அரசு எண்ணுகின்றது போலும்.**

**ஜி.சீ.ஈ. [சாதாரண தரம்] சித்தியடையாத – வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் – ஒரு லட்சம் பேருக்கு உடனடியாக அரச நியமனம் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டு அந்தப் பணியை அரசு ஆரம்பித்துள்ளது. ஆனால், வடக்கு, கிழக்கில் மட்டும் அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பதவிகளுக்காக ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட – வடக்கு, கிழக்கைச் சேர்ந்த – சுமார் 24 ஆயிரம் பேர் இதனால் ஏமாற்றமடைந்து விசனத்தின் உச்சத்தில் உள்ளனர்.**

**ஒரு லட்சம் பேருக்கான அரச நியமனங்கள் வழங்கும் விடயத்தில் ஓரம் கட்டி ஒதுக்கப்பட்ட வடக்கு இளைஞர்களை இராணுவத்தில் மேசன் மேலை, தச்சு வேலை தரலாம் என்று கூறிச் சமாளிக்க முடியும் என ஆளும் தரப்புக் கருதுகின்றது.**

**மேற்படி ஒரு லட்சம் பேருக்கு அரச நியமனங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் மட்டும் சுமார் 13ஆயிரம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட வேண்டும். வேலை வாய்ப்பில் தமிழர் தாயகத்தை ஒதுக்கித் தனது இனப்பாகுபாட்டுப் பரவணித் திட்டத்தை சிங்களம் முன்னெடுக்கின்றது என்ற குற்றச்சாட்டை சமாளிக்கும் விதத்தில் இப்போது அவர்களுக்கு இராணுவத்தில் தச்சன், மேசன் என்ற கடைநிலை ஊழியப் பதவிகளை வழங்கிக் காய் நகர்த்துகின்றது சிங்களம்.**

**அறுபதாயிரம் ரூபா சம்பளம் என்பதால் வேலையற்ற தமிழ் இளைஞர்கள் அள்ளுப்படுவர் – சிங்கள இராணுவ ஆள்திரட்டலுக்குள் தமிழ்த் தேசியம் அடியுண்டு முற்றாகக் கரைந்து போகும் என்ற பேராபத்தைப் புரியாமல்...!**

# அரசு காண விழைகின்ற சமத்துவமும், சமநீதியும் எமது உறவுகளுக்கு ஏற்றும் சுடர்களில் பரவட்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஜனாதிபதிக்கு கோரிக்கைக் கடிதம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம், நவ.05

இனி ஒரு போதும் போரொன்றை விரும்பாத எமது மக்களின் சார்பில் பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் எங்களின் பிள்ளைகளை அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கு, விளக்கேற்றுவதற்கு, கண்ணீர் விட்டு அழுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்த அரசு அளித்திருப்பது நிறைவைத் தருகின்றது என எமது மக்கள் நம்பும் வகையில் தங்களுடைய செயல் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இம் முறையும், இனிவரும் காலங்களிலும் எமது மக்கள் தமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர்தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதற்கான தங்களதும், முப்படைகளதும் காருண்யமான ஒத்துழைப்பு கடந்த நான்கு ஆண்டுகளைப் போல தொடர்ச்சியாக கிடைக்குமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாய் எமது மக்களின் சார்பில் இந்தக் கடிதத்தை சமர்ப்பிக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

உறவுகளை நினைவுகூர்வதற்கு அனுமதி தொடர்பாக ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைக்கும் இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

கடந்த நான்கு வருடங்களாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசமைப்பையோ, பயங்கரவாத தடைச் சட்டத்தையோ மீறாத வகையில் நாம் எமது உறவுகளை நினைவு கூர்ந்த முன்னுதாரணமான முறையை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். விசேடமாக 2019 ஆம் ஆண்டு தாங்கள் இலங்கை நாட்டின் மேன்மை தங்கிய ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் 2019 நவம்பர் 27 ஆம் திகதி எமது உறவுகள், தமது பிள்ளைகளை நினைவு கூருவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பு கிடைத்திருந்தமை பாராட்டத்தக்கது.

இலங்கை நாட்டில் நடைபெற்ற இனரீதியான ஆயுதப்போர் முடிவடைந்து, போருக்குப் பின்னர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகத் தலைமையேற்றிருக்கும் தாங்கள் போருக்கான அடிப்படைக் காரணிகளை இல்லாமற் செய்து இலங்கைத்தீவின் முன்மாதிரியான தலைவராக விளங்குவீர்கள் என்ற நம்பிக்கையில் எமது மக்களின் நம்பிக்கைக ளையும், எதிர்பார்ப்புக்களையும் உங்களுக்கு இந்தக் கடிதம் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

கடந்த முப்பது ஆண்டுகால கடும் போரின் விளைவாக பொருளாதார ரீதியாகவும், வேலைவாய்ப்பு, கல்வி, கலை, கலாசார, மொழி, நில அடையாள ரீதியாகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட, போரின் நினைவுகளும், வடுக்களும் கொண்ட சமூகம் என்ற வகையில் நாமும், எம் தமிழ் உறவுகளும் வலிதாங்கி நிற்கிறோம்.

பல்லாயிரக்கணக்கான உறவுகளின் உயிரிழப்பு, அவய இழப்பு, மாற்றுத்திறனாளிகளின் உருவாக்கம், ஆயிரக்கணக்கான விதவைகளின் தோற்றம், அன்னை, தந்தையை இழந்த நிலையில் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர், இன்னும் விடுவிக்கப்படாத நிலங்கள் என அத்தனை அவலங்களையும் எம்மிடையே உருவாக்கிய கொடூரமான யுத்த முடிவுக்குப் பிற்பாடு நாட்டின் அமைதி, சமாதானம், சகவாழ்வு என்பவற்றை நிலைநாட்டுகின்றமை தொடர்பாகத் தாங்கள் கொண்டுள்ள நம்பிக்கையைப் போல் இலங்கைத் தீவில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே சமத்துவம், சம உரிமையுடைய மன உணர்வைக் கட்டியெழுப்பும் நிலையில் நாங்களும் அதீத அக்கறை கொண்ட, இந்த நாட்டின் தேசிய இனமாக பங்களிப்புச்செய்ய விழைகிறோம்.

போருக்கான காரணிகள் எவையாக இருப்பினும் போரில் பங்குபற்றியவர்களதும், போர் நிகழ்ந்த நிலத்தினதும் விளைவுகள் அந்தப் பகுதி மக்களைச் சார்ந்தனவாகவே இருக்கின்றன. இனச்சமத்துவத்தை அங்கீகரிக்கத் தவறிய முற்போக்குத்தனமற்ற அரசியல் தலைவர்களின் வழிநடத்தல்கள் இளைய சமூகத்தவர் பலரை பலியெடுத்திருந்தது. அது போரில் ஈடுபட்டிருந்த இரு தரப்பிலும் நிகழ்ந்தது என்பதை நாம் அறிவோம். இப்பொழுது மக்களின் மனக்காயங்களுக்கும் அவர்களின் ஆற்றாமைகளுக்கும் ஆறுதலளிப்பது, அமைதி தருவது, நம்பிக்கையை ஊட்டுவது, இறந்தவர்களை நினைவு கூரும் அவர்களின் அடிப்படை உரிமையொன்றே ஆகும். அந்த உரிமை என்பது ஒவ்வொரு குடும்பத்தவர்களதும் சமய, சமூக, பண்பாட்டு விழுமியங்களைத் தழுவியது என்பதால் அத்தகைய பிரார்த்தனைகளையும், சடங்குகளையும் மேற்கொள்கின்ற போது அவை உள்ளூர் அதிகாரத்துவமுடைய அதிகாரிகளால் பயங்கரவாத விடயங்களோடு ஒத்துப் பார்க்கப்படுதல், அல்லது போராட்டம் ஒன்றை மீள உருவாக்கம் செய்வதற்கான செயல் முனைப்பாக காண்பிக்கப்படுதல் என்பன தவறான அர்த்தப்படுத்தல்களாகும்.

வாழும் வயதுடைய இளம் பராயப் புதல்வனை, புதல்வியை, தனது இளவயதில் கரம் பிடித்துக்கொண்ட காதல் கணவனை, இழந்து துயருறுகின்ற நெஞ்சம் எவ்வாறு இருக்கும் என்பதை நாட்டின் தலைவர் என்ற வகைக்கு அப்பால் ஒரு தந்தை என்ற வகையில் உணர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்.

காலச்சூழலில் கரைந்து போன உறவுகளை நினைத்துக் கண்ணீர் வடிக்கவும், விளக்கேற்றவும் துடிக்கின்ற ஒவ்வொரு பிள்ளைகளினுடைய தந்தையாகவும், கௌதம புத்தர் அவர்களின் நல் இயல்புப் போதனைகளூடாக வந்த ஒரு பௌத்தனாகவும் இந்த விடயத்தை அணுகுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன். இனி ஒரு போதும் போரொன்றை விரும்பாத எமது மக்களின் சார்பில் பயங்கரவாதம் எனப்படுகின்ற இயல்புகளுக்கு ஒத்திசையாத வகையில் எங்களின் பிள்ளைகளை அவர்கள் புதைக்கப்பட்ட நிலங்களில் சென்று வழிபடுவதற்கு, விளக்கேற்றுவதற்கு, கண்ணீர் விட்டு அழுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்த அரசு அளித்திருப்பது நிறைவைத் தருகின்றது என எமது மக்கள் நம்பும் வகையில் தங்களுடைய செயல் அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இம் முறையும், இனிவரும் காலங்களிலும் எமது மக்கள் தமது உறவுகள் புதைக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று விளக்கேற்றி, மலர் தூவி, கண்ணீர் சிந்தி, வழிபடுவதற்கான தங்களதும், முப்படைகளதும் காருண்யமான ஒத்துழைப்பு கடந்த நான்கு ஆண்டுகளைப் போல தொடர்ச்சியாக கிடைக்குமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையின் வெளிப்பாடாய் எமது மக்களின் சார்பில் இந்தக் கடிதத்தை சமர்ப்பிக்கின்றேன்.

தாங்களும் தங்கள் அரசும் காண விழைகின்ற சமத்துவமும், சமநீதியுமுடைய இலங்கை நாட்டில் எங்கள் பிள்ளைகளுக்காக நாம் ஏற்றும் சுடர்களின் ஒளியும் பரவட்டும். – என்றுள்ளது.



# கொரோனாத் தொற்றிலிருந்து நாமே எம்மைப் பாதுகாப்போம்

## தமிழரசின் தலைவர் மாவை வேண்டுகோள்



இலங்கையில் கொரோனா வைரஸ் என்ற கொடிய தொற்றிலிருந்து நாங்களே எங்களைப் பாதுகாப்போம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கையில் கொரோனா அலை பல பாகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்தத் தொற்றானது சமூகப் பரவலை எட்டிவிட்டது என்றும் கருதப்படுகின்றது. தேசியப் பேரழிவை ஏற்படுத்தப் போகின்றது எனவும் எச்சரிக்கப்படுகின்றது.

இந்த நோய்த் தொற்றின் தீவிரம் உலகம் முழுவதும் சமூக, பொருளாதாரப் பாதிப்புக்களையும், அனைத்துத் துறைகளிலும் பெரும் பொருளாதார வீழ்ச்சியையும் அவற்றுக்கு அப்பால் உயிர் ஆபத்துக்களையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்த நோய் அடுத்து மூன்று ஆண்டுகளுக்குநீடிக்கும்என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் முதியவர்கள், நோய்வாய்ப்பட்டோரை மட்டுமல்லாமல் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த, இல்லாத மக்களையும் இலகுவில் தொற்றி மரணத்தை ஏற்படுத்தி வரும் ஆபத்தும் உண்டு.

இலங்கையில் முப்பதாண்டுக்கும் மேலாக இடம் பெற்ற போர் காரணமாக தமிழ்த் தேச மக்களில் இலட்சக்கணக்கான மக்கள், இளம் சமூகம் உயிர்ப் பலியாகியது மட்டுமல்ல ஊட்டச்சத்தற்றவர்களாகக் குறிப்பாகப் பிறக்கின்ற குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மாரும் 70 – 80 வீதமானோர் பாதிப்படைந்துள்ளனர். இதனை ஐ.நா. 'யுனிசெவ்' குழந்தைகள் நிறுவனம் கூறி வருகின்றது. ஏற்கனவே எம்மினம் இலட்சக்கணக்கில் உயிரிழப்புக்களைச் சந்தித்து விட்டது. இதனாலும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் கொரோனா நோயினால் பாதிப்புக்கள் அதிகரிக்க முடியும்.

கொரோனா நோய்க்கு மருந்து 2021 நடுப்பகுதியில்தான் மக்கள் பாவனைக்கு வரும் என ஐ.நா. சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்தநிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் கொரோனா பரவும் வாய்ப்பு அதிகமுள்ளது.

இந்த நோய்க்கான வைரஸ் கிருமி புதுப்புது வடிவங்களில் வெவ்வேறு வகை இரத்த ஓட்டமுள்ளோரிடம் வெவ்வேறு வகையில் பரவ வாய்ப்புக்கள் உண்டு என மருத்துவத்துறை விஞ்ஞானிகள் அறிவிக்கின்றனர்.

இதனால் உலக சுகாதாரத் துறையும் இலங்கை மருத்துவத் துறையினரும் மக்களின் உயிர்ப்பாதுகாப்பின் பொருட்டு எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கும் அறிவிப்புக்களுக்கும் நாம் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

மக்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பேணுவதுடன் பெருமளவில் கூட்டமாயில்லாமல் முகக்கவசம் கட்டாயம் அணிந்து தம் அலுவல்களைப் பேணவும், அதன் மூலம் இந்நோய் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும் எனவும் வற்புறுத்துகின்றோம். அத்துடன் பி.சி.ஆர். மருத்துவ பரிசோதனைகளை முதலில் பாடசாலை மாணவர்களிடமும் மக்களிடத்திலும் முழுமையாக நடத்த வேண்டும்.

இவ்வாறு பாதிப்புள்ளாகும் மக்கள், அரச ஊழியர்கள், ஏனைய தொழில்துறையினருக்கு அரசானது போதிய உதவிகளையும், உணவு மருத்துவ வகைகளையும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றோம்.

அத்தோடு வேளாண்துறை உற்பத்திகள், கடல் வளத்துறையினர் செயற்பாடுகளில் மீன், கருவாடு மற்றும் ஏனைய துறையினர் உற்பத்திகளையும் சந்தைப் பத்துவதற்கும், மக்கள் உணவுப் பண்டங்களைப் பாதுகாப்பாகப் பெறுவதற்கும் அரச துறையினர் உதவ வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றுள்ளது.

# ஊரடங்கை மீறிய 201 பேர் 24 மணி நேரத்தில் கைது!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 201 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது 31 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 04 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2 ஆயிரத்து 193 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், 338 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனிடையே அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு உத்தரவு களை பின்பற்றத் தவறியமைக்காக கடந்த நான்கு நாள்களில் 75 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் 112 பொலிஸ் பகுதிகளிலும் குளியாப்பிட்டி, எஹெலியகோடா மற்றும் குருநாகல் நகராட்சிமன்ற பகுதிகளிலும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு தற்போது நடைமுறையில் உள்ளது.

ஊரடங்கு உத்தரவு உள்ள அல்லது நடை முறையில் இல்லாத பகுதிகளில் வசிப்பவராக இருந்தபோதிலும், அனைவரும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றுமாறும் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

# ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்தவர் கைதானார்!

*தனியார் டாக்ஸி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூன்று ஊரடங்கு உத்தரவு அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*இவ்வாறு மூன்று ஊரடங்கு உத்தரவு அனுமதிப் பத்திரங்கள் சுமார் 12 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*அத்தோடு சந்தேகநபர் பண்டாரகமவில் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் , அவரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் ஊடகவியலாளர் பணி பாராட்டுக்குரியது!

## அமைச்சர் கெஹலிய புகழாரம்



நாட்டில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர் நிறைவேற்றும் பொறுப்பு மேன்மை மிக்கது என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான ஊடகவியலாளர்கள் தமது உயிர்களையும் துச்சமாக மதித்து செயற்பட்டு வருகின்றமையைக் காண முடிகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாடு எதிர்கொள்ளும் அனர்த்த நிலைமைகளில் ஊடகவியலாளர்கள் தமது தொழில்வாண்மையைக் கருத்திற்கொள்ளாமல் சிறப்பு மிக்க தேசிய கடமையை நிறைவேற்றுகின்றனர் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சில ஊடகவியலாளர்கள் இந்தத் தொற்று நிலைமையைத் தோற்கடிப்பதற்காக மக்களுக்கு வழங்கிய அறிவும் விளக்கமும்தகவல்களும்மிகவும்துணை புரிந்திருக்கின்றன எனவும் அமைச்சர் கூறினார்.

பல ஊடக நிறுவனங்கள் ஒன்றிணைந்து மக்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளன. பிராந்திய ஊடகவியலாளர்களின் பொறுப்புக்களும் மிகவும் சிறப்பு மிக்கவையாகும். எதிர்காலத்தில் இதற்காக உரிய பாராட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்போம் என அமைச்சர் குறிப்பிட்டார்.

# யாழ். மீனவர்கள் தொழிலுக்கு செல்வதற்கு தயக்கம் தெரிவிப்பு!

## *சந்தைவாய்ப்பின்மையே காரணம்*

போதிய சந்தை வாய்ப்பின்மையால் யாழ்.மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர் என கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

குடாக்கடலில் கடற்தொழிலுக்குச் செல்லும் 50 சத வீத மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுக் காரணமாகத் தென்பகுதிக்குக் கடலுணவு ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனால் பிடிபடும் கடலுணவுகள் போதிய சந்தை வாய்ப்பின்றித் தேங்கிக் காணப்படுகின்றன.

அதனால் உள்ளூர் சந்தைகளில் நண்டு, இறால், கணவாய் போன்றவை கிலோ 400 ரூபாக்கும் குறைவாக விற்பனை செய்யப்படுகின்றன.

அதேவேளை தென்பகுதியில் மீன் சந்தையில்இருந்துகொரோனோதொற்று ஏற்பட்டமையால் மக்கள் கடலுணவைக் கொள்வனவு செய்யத் தயக்கம் காட்டி வருகின்றமையாலும் உள்ளூர் சந்தைகளில் கடலுணவுக்கான கேள்வியும் குறைவடைந்துள்ளது. அதனால் சந்தைகளில் விற்பனை குறைவடைந்துள்ளது.

இவ்வாறான காரணங்களால் தொழிலுக்குச் செல்வதற்கு மீனவர்கள் விரும்பாது தவிர்த்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

# யாழ் நவீன சந்தையில் மூடப்பட்ட 4 கடைகளும் நேற்று மீளத் திறப்பு

யாழ்நவீனசந்தைக்கட்டடத்தொகுதியில்கொரோனா தொற்று அச்சத்தால் மூடப்பட்டிருந்த கடைகள் இன்றைய தினம் மீளத் திறக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து வருகை தந்து கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவரின் உறவினர்களின் நான்கு கடைகள் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரியினால் கடந்த சில தினங்களுக்கு முன் மூடப்பட்டிருந்தன.

இந்நிலையில் அந்தக் கடை உரிமையாளர்களுக்கு முதலாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதன் அடிப்படையில் இன்றையதினம் அந்தக் கடைகளைத் திறப்பதற்கு சுகாதாரப் பகுதியினரால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அக்கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டன.

யாழ் மாநகர முதல்வர், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி, யாழ் வணிகர் கழக தலைவர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் திறக்கப்பட்டன. இந்தக் கடைகளில் பணியாற்றுபவர்களுக்கு கொரோனாத் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.



காலைக்கதிர்
Kalaikkathir

அங்கம் 03

# இலங்கை – இந்திய ஒப்பந்தம்:

# ஒரு வரலாற்றின் திசை நோக்கு

சிரேஷ்ட சட்டத்தரணி செ. ரவீந்திரன்
(தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் – T.R.R.O)
ஆஸ்திரேலியா

காவல்துறை மட்டங்களிலிருந்து எழுந்த கண்டனங்களாலும் சார்க் பெங்களுருவில் நடைபெற ஆயத்தங்கள் நடப்பதாலும் மத்திய அரசின் அனுசரணையோடு அதுவரை பிரபாகரனுக்கு பக்கபலமாக நின்று பகிரங்கமாகவே பல கோடி ரூபா நிதியளித்த எம்.ஜி.ஆர். அனைத்து இயக்கங்களினதும் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். காவல் துறையினர் முதல் முறையாக விடுதலை இயக்கத்தினரை சாதாரண கிரிமினல் குற்றவாளிகளாக கைது செய்து, பின்னர் அவர்களின் முக்கியம் கருதி வீட்டுக்காவலிலோ அல்லது பிணையிலோ விடுவித்தனர். இது அவர்களின் தற்பெருமையைப் பெருமளவு பாதித்தது.

அரசுகள் அவை சார்க் மகாநாட்டை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கை என்று முலாம் பூசியது.

ராஜீவ் காந்திக்கு மாநில அரசுகளின் தயவு தேவையாக இருந்ததால் எம்.ஜி. ஆரை திருப்பதிப்படுத்தவேண்டியவராகவும் இருந்தார். தமிழ் விடுதலை இயக்கங்கள், மத்திய அரசின் அரவணைப்பில்தான் காலூன்றின. தமிழ் நாட்டில் வன்முறை காலூன்றாதிருக்க இலங்கைத் தமிழர் பிரச்சினையை சீராக்கி, அங்குள்ள வன்முறையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் வந்தது.



ஆனால், ஜே.ஆரோ எதற்கும் இணங்குவபராக இல்லை. ஓரளவு தனி அதிகாரம் தரலாம், ஆனால் திருகோணமலைப்பகுதி சிங்கள அலகின் கட்டுப்பாட்டில் தான் இருக்கவேண்டும் என்ற நிபந்தனையை இந்தியாவிலிருந்து ராஜீவின் பிரதிநிதியாக இலங்கை சென்ற தினேஷ் சிங்கிடம் வைத்தார்.

விடுதலை இயக்கங்களின் தாக்குதல்கள் அதிகரிக்கவும் பொதுமக்களை வாட்டுவதற்காகவும் அத்தி



லலித் அத்துலத் முதலி

யாவசியப்பொருள்கள் தமிழ்ப்பிரதேசங்களுக்கு செல்வதை நிறுத்தினார். கிழக்கில் அம்பாறை பகுதிகளில் விடுதலை இயக்கங்கள் வன்முறைகளை விஸ்தரித்தன.

இயக்கங்களிலிருந்து ஆயுதப்பறிப்பு நடந்தபோது எம்.ஜி. ஆர் டெல்லியிலிருந்தார். பெங்களூரில் நவம்பர் 15 – 17 வரை நடக்கவிருக்கும் சார்க் மகாநாட்டில் இடம் பெறவிருந்த பேச்சுவார்த்தைகளில் எம்.ஜி. ஆரையும் சேர்த்து அவர் மூலம் பிரபாகரனையும் அந்த சந்திப்பில் ஈடுபடுத்தி இலங்கை தரப்பினரோடு நேரடியாக கலந்துரையாட நடவடிக்கை எடுத்தார்கள். இவற்றுக்காகவே எம். ஜி.ஆர் டெல்லியிலிருந்தார்.

அங்கிருந்து சென்னை வந்த எம்.ஜி.ஆர். பொலிஸ் ஆணையாளரிடம் பிரபாகரனையும் அன்டன் பாலசிங்கத்தையும் அடுத்த நாள் இந்திய விமானப் படைக்குச்சொந்தமான தனிப்பட்ட விமானத்தில் பெங்களுருவுக்கு அனுப்புமாறு பணித்துவிட்டு, அங்கு பயணமானார்.

அவர் பணித்தவாறு அவர்களிருவரும் இரண்டு புலனாய்வாளர்களுடன் பெங்களுருவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு எம்.ஜி. ஆர். சந்திப்புகளின் நோக்கங்கள் பற்றியும், தான் டெல்லியில் ராஜீவுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்த உந்துதல் பற்றியும் தான் பக்கபலமாக இருப்பேன், அது புரிந்துணர்வின் முன்னோடியேயன்றி ஏதும் கையெழுத்திடும் வைபவமன்று எனவும், ஜே.ஆருடன் இலங்கைத்தரப்பை சந்திப்பதே நோக்கம் என்றும் விளங்கப்படுத்தினார்.

ஆயினும் எவற்றுக்கும் பிரபாகரன் இணங்கவில்லை. தமது ஆயுதங்கள் சாதாரண கிரிமினல்கள் போன்று பறிக்கப்பட்டதால் தங்களுக்கு நம்பிக்கைகள் குறைந்துவிட்டதாக கூறி தாங்கள்தான் தங்களுக்காக போராடவேண்டும் என்றும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவு தராது , இந்திய – இலங்கைத் தரப்பினர் யாரையும் சந்திக்காது பெங்களுருவிலிருந்து திரும்பினார்.

அதனால், எம்.ஜி.ஆருக்கு பலத்த ஏமாற்றமும் கோபமும் ஏற்பட்டது. சென்னை திரும்பியதும் புலிகளிடமிருந்து வயலர்ஸ் தொலை தொடர்பு சாதனங்கள் அனைத்தையும் பறிமுதல் செய்தார். அதன்பின்னர் பிரபாகரன் உண்ணாவிரதமிருந்து அதனால் ஏற்பட்ட இழுபறிகளைத்தொடர்ந்து அவை புலிகளிடம் மீளத் தரப்பட்டன.

ஆயினும் இரண்டு தரப்புகளிடமும் இருந்த உறவில் ஒரு பனிமேகம் சூழ்ந்தது.

தான் தொடர்ந்தும் தமிழகத்திலிருந்தால், அது தன்னை அழிப்பதற்கே வழிகோலும் என்று நினைத்த பிரபாகரன் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு தீர்மானித்து தமிழ் நாட்டை விட்டு வெளியேறினார்.

தான் நாடு திரும்புவது தொடர்பாக அவர் எம்.ஜி.ஆரிடத்தில் எந்தவொரு அபிப்பிராயமும் கேட்கவில்லை. அவர் வெளியேறி மூன்று வாரங்களுக்குப்பின்னரே, புலிகள், பிரபாகரன் தனது இருப்பிடத்தை மாற்றிவிட்டார் என்று அறிவித்தனர்.

அதுவும் எம்.ஜி.ஆருக்கு ஏமாற்றமாக இருந்தது.

பிரபாகரன் யாழ்ப்பாணம் வந்தடைந்ததும் புலிகளை திடப்படுத்துவதிலும் அவர்கள் மாத்திரமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை பிரசாரப்படுத்துவதிலும் தனது கவனத்தை செலுத்தினார்.

முதலில் ரெலோ இயக்கம் தடைசெய்யப்பட்டு, அவர்களே தமிழ்ப்பகுதிகளில் இடம்பெற்ற கொலை, கொள்ளைச்சம்பவங்களின் சூத்திரதாரிகள் என சித்திரிக்கப்பட்டு அழிக்கப்பட்டனர்.

அதனையடுத்து புளட் இயக்கமும் அங்கு அவர்



பேர்ணாட் திலகரத்தின

களால் தடைசெய்யப்பட்டது. அதன்பின்னர் ஈ.பி. ஆர். எல். எவ் . இயக்கமும் தடைசெய்யப்பட்டு, இயக்கரீதியான அதிகாரத்தை செலுத்தினர்.

இவை நடந்த காலத்தில் ஏற்பட்ட இரத்தக்களரி



எம்.ஜி.ஆரும் பிரபாகரனும்

களையும் அழிந்துபோன இளைஞர்களையும் அதனால் வந்த வேதனைகளையும் ஆயுதங்களின் மீதான பயத்தில் தமிழ்மக்கள் தாங்கிக்கொண்டார்கள். இதர இயக்கங்கள் அனைத்தும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதும் திடீரென ஒரு நாள் தளபதி கிட்டு, மேஜர் கொப்பேகடுவவை கோட்டை இராணுவ முகாமுக்கு வெளியே ஒரு காரில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினார்.

புலிகளின் பிரசாரங்கள் இந்தியாவை நம்பி பெறக்கூடிய வெற்றியானது மரியாதைக்குரியதாக இருக்கமுடியாது. நாங்கள் எமது காலிலேயே நின்று போராடவேண்டும் என்ற பாதையில் சென்றமை புலிகளுக்கும் இலங்கை படையினருக்கும் நெருக்க நிலை தோன்ற வழிகோலியது.

போரற்ற நிலை ஒன்றை ஒரு தலைப்பட்சமாக இலங்கை அரசு அறிவித்து இருபகுதியினரும் காங்கேசன்துறையில் கிட்டுவின் தலைமையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தியாவுக்கு இந்த முன்னேற்றம் புதிராகவிருந்தது. எம். ஜி.ஆராலும் தமிழர் விடுதலைக்கூட்டணியினராலும் இதனை உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை.

அதே சமயம் ஜனவரி முதலாம் திகதி 1986 இல் புலிகள் தனிநாடு பிரகடனம் செய்ய ஆயத்தங்கள் நடக்கிறது என்ற வதந்தி உலாவத்தொடங்கியது.

ஆனால், அந்தத் திகதியில் புலிகள் சிவில் நிர்வாகத்தை எடுப்பதாகக் கூறி, வாகன வரிகள் போன்றவற்றை தாங்களே இனிமேல் வசூலிப்போம் என்றுஅறிவித்துவாகன வீதி கட்டுப்பாடு களை கண்காணித் தனர்.



ஹர்திப் சிங்பூரி

இதற்குப்பதிலடியாக ஜே.ஆர். யாழ். குடாநாட்டிற்கு எல்லா அத்தியாவசிய பொருள்களையும்அதே ஆண்டு ஜனவரி 02 ஆம் திகதியிலிருந்து முடக்கினார். மக்கள்உணவு, மருந்து, எரிபொருள்தட்டுப்பாடுகளினால் தவித்தார்கள்.

1987 மார்ச் 4 ஆம் திகதி நடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் கூட்டத்தில், இந்திய அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், இவையெல்லாம் மனித உரிமை மீறல்கள் என்றும், தங்களது பிராந்தியத்தில் ஓர் இன அழிப்பை பார்த்து இந்தியா வாளாவிருக்கமுடியாதென்றும் கர்ஜித்தார்.

புலிகள் அம்பாறை, திருக்கோணமலை மாவட்டங்களில் தங்களது தாக்குதல்களை முடுக்கிவிட்டனர். அவற்றில் நூறுக்கும் மேற்பட்ட சிங்கள மக்கள் பலியானார்கள்.

அத்துலத் முதலி பலகாலம் தனது திட்டத்திலிருந்த வடமராட்சி தாக்குதலை மே 26 – 1986 இல் கண்மூடித்தனமாக உக்கிரத்துடன் தொடங்கினார். அதே சமயம் யாழ்ப்பாணம் பொது மக்கள் மீதும் வான் தாக்குதல் நடத்தப்பட்டது. யாழ். மக்கள் கைதிகளாக அத்தியாவசிய உணவு மருந்துகளின்றி தவித்தனர்.

கூட்டணியினர், எம்.ஜி.ஆர், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் நெருக்கடிகளினால், 1986 ஜுன் 01 ஆம் திகதி இலங்கையின் இந்தியத்தூதுவராக இருந்த ஜே. என். திடிக்ஸிற் தாங்கள் அத்தியாவசியப்பொருள்கள் கொண்ட கப்பலொன்றை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்போகிறோம் என்பதை இலங்கை அரசுக்கு தெரிவித்தார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

## 60 வயதுக்கு மேற்பட்டவர்களே கொரோனாவால் அதிகம் பலி!

மேல் மாகாணத்தில் அண்மையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதுக்கு மேற்பட்டோராவர். இளைஞர்களுடன் ஒப்பிடும் போது உயிரிழக்கக் கூடிய எச்சரிக்கையும் இந்த வயதுடையோருக்கே அதிகமுள்ளதாக விசேட வைத்தியர் பாலித கருணாபேம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னரை விட தற்போதுள்ள வைரஸின் தன்மையானது பரவும் வேகம் அதிகமாகும். சுமார் 25 வயதுடைய இளைஞர்களுடன் 60 வயதுடையவர்களை ஒப்பிட்டு அவதானிக்கும் போது 60 வயதுடையோர் மரணிக்கக் கூடிய எச்சரிக்கை 30 சதவீதம் அதிகமாகக் காணப்படுகிறது. முதியவர்கள் எந்தளவு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

அத்தோடு நாட்பட்ட தொற்றா நோயால் பாதிக்கப்பட்டுள்ள வர்களுக்கும் இந்த அவதான நிலைமை காணப்படுகிறது. அதிக இரத்த அழுத்தம், இதய நோய் மற்றும் நீரிழிவு நோய் என்பவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குவர். அண்மையில் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதை விட அதிக வயதுடையவர்களாவர்.

ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் தமது சேவைகளை ஆற்றும் போது அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மக்கள் ஒன்று கூடும் இடங்களில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதால் இயன்றவரை உற்சவங்கள், வைபவங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர். - என்றார்.

## அடக்கம் செய்ய அனுமதி வழங்க துரித நடவடிக்கை மிக அவசியம்!

### அரசைக் கோருகின்றார் ஹக்கீம்

கொழும்பு, நவ.05

கொரோனா வைரஸ் தொற்றால் இறக்கும் முஸ்லிங்களின் ஜனாஸக்களைப் புதைக்க அனுமதிப்பது தொடர்பில் அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தினார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அவர்,

அவசரப்படாமல் சிந்தித்து முடிவு எடுக்க வேண்டிய காலம் இது. இடர் முகாமைத்துவ



தேசியக் கவுன்ஸிலை உடனடியாக அமைத்து எதிரணிக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும்.

நாடு பாரிய அனர்த்த நிலைக்கு முகங்கொடுத்துள்ளது. இறந்தவர்களை அடக்குவது தொடர்பான பிரச்சினை பாரதூரமான பிரச்சினையாக வளர்ந்துள்ளது.

முஸ்லிம் மக்கள் மட்டுமன்றி கத்தோலிக்க மக்களுக்கும் இது தொடர்பில் பிரச்சினை உள்ளது.

இதிலுள்ள விஞ்ஞானபூர்வமான அடிப்படையை உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

நீதி அமைச்சர் அலி சப்ரி எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பாகவும், பிரதமர் அதற்கு அளித்து வரும் ஒத்துழைப்பும் பற்றி எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் அரசு துரித நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறோம். - என்றார்.

# ஒரு மாதத்தில் 7 ஆயிரம் தொற்றாளர் கேகாலை, குருநாகல் அபாயநிலையில்!

கொழும்பு, நவ.05

நாட்டில் கொவிட் - 19 தொற்றின் இரண்டாம் அலை உருவாகி ஒரு மாதம் நிறைவடைந்துள்ள போதிலும், ஆரம்பக் கட்டத்தை விட தற்போது நிலைவரம் எச்சரிக்கைமிக்கதாகியுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களை விடவும் இருமடங்குக்கும் அதிகமான தொற்றாளர்கள் இந்த ஒருமாதததுக்குள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் சுமார் 3 லட்சம் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 3 ஆயிரம் தொற்றாளர்கள் மாத்திரதே இனங்காணப்பட்டனர்.

எனினும் நிறைவடைந்த ஒரு மாதத்தில் 2 லட்சம் பி.சி.ஆர். பரிசோதனைகளில் 7 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை மேலும் இரு கொரோனா மரணங்கள் பதிவாகின. கடந்த முதலாம் திகதி ஜம்பட்டா வீதியில் உயிரிழந்த 68 வயதுடைய பெண்ணின் சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர் தொற்றுக்குள்ளாயிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. அந்த மரணம் 22 ஆவது கொரோனா மரணமாக அறிவிக்கப்பட்டது.

உயிரிழந்த குறித்த பெண்ணின் குடும்ப உறுப்பினரொருவருக்கு ஏற்கனவே கொவிட் - 19 தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில், குடும்பத்திலுள்ள ஏனையோர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். உயிரிழந்த பெண் நிமோனியாவால் பாதிக்கப்பட்டிருந்தார் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதே வேளை நேற்றுமுன்தினம் மாலை 7 மணியளவில் 23 ஆவது கொரோனா மரணமும் பதிவானது. கொழும்பு 15 பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் உயிரிழந்தார்.

அவரது பிரேத பரிசோதனையில் கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்தது. அந்தப் பெண் தடிமன், இருமல் என்பவற்றோடு வேறு நோய்க்கு உட்பட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொத்தணிகளுடன் தொடர்புடைய 272 தொற்றாளர்கள் நேற்று முன்தினம் இனங்காணப்பட்டனர்.

இவர்களில் மூவர் தனிமைப்படுத்தல் நிலையங்களிலுள்ளவர்களாவர். ஏனைய 269 பேர் பேலியகொடை கொத்தணி தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோராவர். அதற்கமைய மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொத்தணிகளுடன் தொடர்புடைய தொற்றாளர்களின் எண்ணிக்கை 8 ஆயிரத்து 129 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா பரவல் முதலாம் அலை ஏற்பட்ட போது வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களே பெருமளவில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

எனினும் இரண்டாம் அலையில் சமூகத்திலிருந்து தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதோடு, கொவிட் கட்டுப்படுத்தல் செயற்பாடுகளில் ஈடுபடும், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மேல் மாகாணத்தில் கம்பஹா, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கள் அபாயமுடையவையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும் தற்போது கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**பொலிஸ் உத்தியோகஸ்தர்கள்**

கடந்த திங்கட்கிழமை இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 39 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் உள்ளடங்குகின்றனர் என கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இராஜகிரிய விசேட அதிரடிப்படையில் 23 பேருக்கும், நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒருவருக்கும், குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஒருவருக்கும், இராஜதந்திர பாதுகாப்பு பிரிவில் இருவருக்கும், பொரளை பொலிஸ் நிலையத்தில் 8 பேருக்கும், வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் இருவருக்கும், புறக்கோட்டையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கேகாலை**

கேகாலை மாவட்டத்தில் ஹெம்மாத்தகம, மாவனெல்லை மற்றும் புளத்கொஹுபிட்டி ஆகிய பொலிஸ் பிரிவுகளும் கலிகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளும் கடந்த திங்கட்கிழமை இரவு முதல் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டன.

திங்கட்கிழமை கேகாலை மாவட்டத்தில் வறக்காபொல பிரதேசத்தில் 11 தொற்றாளர்களும், அத்தனாயக்க பிரதேசத்தில் 10 தொற்றாளர்களும், யட்டியாந்தோட்டையில் ஒரு தொற்றாளரும் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகத் தெளிவுபடுத்திய மாவட்ட செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய -

கேகாலை மாவட்டத்தில் இதுவரையில் 127 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 1,547 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை சுகாதார பாதுகாப்புடன் முன்னெடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

**குருநாகல்**

இதேவேளை, குருநாகல் மாவட்டத்தில் கிரிஉல்ல பிரதேசமும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் திங்களன்று 4 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

**ஒரு மாதத்தில் 2 லட்சம் பி.சி.ஆர். பரிசோதனைகள்**

ஒக்ரோபர் 3 ஆம் திகதி மினுவாங்கொடை கொத்தணியில் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. இந்நிலையில் நாடளாவிய ரீதியில் 2 லட்சத்து 7 ஆயிரத்து 819 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 2 லட்சத்து 6 ஆயிரத்து 422 பரிசோதனை முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கிடைக்கப் பெற்ற முடிவுகளில் 7 ஆயிரத்து 582 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது நூற்றுக்கு 3.67 சதவீதமாகும் என்று கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

**நிலைமையைக் கட்டுப்படுத்த ஒரு மாதம் செல்லும்**

தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமைய தொடர்ந்தும் செயற்பட்டால் ஒரு மாத காலததுக்குள் கொத்தணியை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என்று பதில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மினுவாங்கொடை ஆடை தொழிற்சாலையில் முதலாவது தொற்றாளர் இனங்காணப்பட்டதன் பின்னர் கடந்த ஒரு மாத காலமாக இனங்காணப்பட்டதை விட குறைந்தளவான தொற்றாளர்களே அண்மையில் இனங்காணப்படுகின்றனர். எனினும் இனி அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட மாட்டார்கள் என்று கூற முடியாது.

தொற்றாளர்களை அடையாளம் காணுவதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் போது நாம் எதிர்பார்க்காத பிரதேசங்களிலும் தொற்றாளர்கள் இனங்காணப்படக் கூடும். இவ்வாறான நிலைமை தொடருமானால் அபாய நிலையும் நீடிக்கும்.

எனினும் தற்போது முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அமைய தொடர்ந்தும் செயற்பட்டால் ஒரு மாத காலத்துக்குள் கொத்தணியை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

**தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொருவரதும் பொறுப்பு**

தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி காணப்பட்டால் அவர்களால் வைரஸுக்கு ஈடு கொடுக்க முடியும். எனினும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்பட்டால் மரணத்துக்கு முகங்கொடுக்கக் கூடிய அபாயமே உள்ளது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்தார்.

வைரஸ் பரவலில் தற்போது 3 ஆம் கட்டத்தில் இருக்கின்றோம். இதே நிலைமை தொடருமானால் வைரஸ் பரவல் கை மீறிச் செல்லக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

**பி.சி.ஆர். எடுக்கும் அனைவரும் தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை**

பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கும் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை இல்லை. எனினும் முதலாவது தொடர்பாளர்கள், அறிகுறிகள் உடையோர் நிச்சயம் தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் பிரதானி வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

**அநாவசிய கால தாமதம் பரவலுக்கு ஏதுவாகும்**

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமடைவதற்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும். இவ்வாறு முடிவுகள் தாமதமடைகின்றமையால் தொற்றாளர்களை இனங்காண்பதிலும் சிக்கல் ஏற்படும். தொற்றாளர்கள் இனங்காண்பதில் தாமதம் ஏற்பட்டால் பிரதேசங்களில் பரவலைத் தடுப்பதிலும் சிக்கல் ஏற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கேகாலை, களுத்துறை, குருநாகல் மாவட்டங்களுக்கு பிரத்தியேகமாக பி.சி.ஆர். இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டும். இவ்வாறாக அநாவசிய தாமதங்களைத் தவிர்த்து கிளை கொத்தணிகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொரளை பொலிஸில் 41 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று



கொழும்பு, நவ. 04

பொரளை பொலிஸின் 41 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

அதன்படி, கோவிட் தொற்றுக்குள் ளான அனைத்து பொலிஸ் அதிகாரிக ளும் தற்போது களுத்துறை பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படு கிறது.

பொரளை பொலிஸிற்கு பொது மக் கள் செல்வது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக் கப்படுகிறது.

# யாழ்., வன்னியிலிருந்து ராணுவத்துக்கு ஆள்கள் தலா 4,500 பேர் திரட்டு

## மாதம் 60 ஆயிரம் ரூபா சம்பளம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 04

வடக்கு மாகாணத்தில் இருந்து 9 ஆயிரம் பேரைப் புதிதாகத் திரட்டி இரா ணுவத்தில் இணைக்க அரசு தீர்மா னித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் ஆளுநர் நடத்திய சந்திப்பில் இந்த விடயம் தெரி விக்கப்பட்டதாக அறிய வந்தது.

கொரோனாத் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக ஐந்து மாவட்ட அதிகாரிகளுட னும் வடக்கு ஆளுநர் இன்று நடத்திய சந்திப்பின் போதே இந்த விவரம் வெளி யிடப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருந்து 4 ஆயிரத்து 500 பேரும், வன்னிப் பகு தியில் இருந்து 4 ஆயிரத்து 5 00 பேரு மாகவே இந்த 9 ஆயிரம் பேரும் இணைத் துக்கொள்ளப்படவுள்ளனர். இராணுவ உதவிப் பணியாளர்களாக மரவேலை, மேசன் வேலை உள்ளிட்ட வேலைக ளுக்கான ஆள்திரட்டாக இது அமையும் என்றும் கூறப்பட்டது.

இவ்வாறு பணிக்கு அமர்த்தப்படு வோர் வடக்கு மாகாணத்திலேயே பணி யாற்றும் சந்தர்ப்பம் வழங்கப்படுவ தோடு மாதாந்தம் 60 ஆயிரம் ரூபா வரை யில் சம்பளம் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. விரைவில் இதற் கான விண்ணப்பங்கள் கோரப்படும். விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 29ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்பட்டது.

# எல்லை மீறும் கொரோனாவை கட்டுப்படுத்த ஒத்துழையுங்கள்

## நாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி அவசர வேண்டுகோள்



கொழும்பு, நவ. 04

இலங்கையின் கொரோனா வைர ஸின் மூன்றாவது அலை எல்லை மீறும் நிலையில் உள்ளது. இதை உடனடியா கக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனை வரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்தியாவசிய தேவைகள் இன்றி மக் கள் எவரும் வீட்டுக்கு வெளியில் செல் லாமல் இருக்க வேண்டும்.

அதனூடாகவே கொரோனாவைப் பரவலைக் கட்டுப்படுத்த முடியும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக் கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியு மான லெப்டினனட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

மேல் மாகாணத்தில் கொரோனாப் பரவல் அதிகரித்ததால் அம்மாகா ணத்தை முடக்கியுள்ளோம். ஏனைய மாகாணங்களில் சில கிராமங்கள் மட் டும் முடக்கப்பட்டுள்ளன. கொரோனாக் கொத்தணிப் பரவலைத் தடுக்கும் வகை யிலேயே இந்த நடவடிக்கையை முன் னெடுத்துள்ளோம்.

முழு நாட்டையும் முடக்கினால் நாட் டின் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்படும். அதனைக் கருத்தில் கொண்டே நாம் செயற்படுகின்றோம்.

கொரோனாவால் ஏற்படும் உயிரி ழப்புக்கள் ஒரு புறமிருக்கப் பட்டினி யால் மக்களைச் சாகடிக்க நாம் விரும்ப வில்லை. நாட்டை முழுமையாக ஏன் முடக்கவில்லை என்று கேட்பவர்களிடம் இந்தப் பதில் கருத்தைச் சொல்ல விரும் புகின்றோம்.

எனினும், கொரோனா எல்லை மீறிச் சென்றால் முழு நாட்டையும் முடக் குவது தவிர்க்க முடியாது. இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க மக்க ளின் ஒத்துழைப்பு எமக்கு மிகவும் அவ சியமாகும். அத்தியாவசிய தேவைகள் இன்றி மக்கள் எவரும் வீட்டுக்கு வெளி யில் செல்லாமல் இருக்க வேண்டும்.

சுகாதார வழிகாட்டல்களை அனை வரும் பின்பற்ற வேண்டும். கொரோ னாத் தொற்றுச் சந்தேகநபர்கள் பி.சி. ஆர். பரிசோதனையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். தனிமைப்ப டுத்தலில் இருப்பவர்கள் விதிமுறை களை மீறிச் செயற்படாமல் இருக்க வேண்டும். - என்றார்.

# கிராண்ட்பாஸ் அடுக்குமாடியில் 16 பேருக்கு கொரொனா

கொழும்பு, நவ. 04

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதி யில் அமைந்துள்ள அடுக்கு மாடி வளா கத்தில் கொரோனா தொற்றாளர்கள் 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பிரதேசத் தில் அமைந்துள்ள சுமார் 30 வீடுகள் சுகாதார பிரிவினரால் மூடப்பட்டுள் ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வீடமைப்பு வளாகத் தில் வசிக்கும் அனைவரையும் தங்களின் வீடுகளுக்குள்ளே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

# கொரோனாவைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு அவசியம்!

## கோருகின்றார் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ





யாழ்ப்பாணம், நவ. 04

வடமாகாணத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பின்றி கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முடியாது என வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதி பர் சஞ்சீவ தர்மரட்ன தெரிவித்தார்

யாழ்ப்பாண நகரில் பொலிஸாரால் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்டனர் அந்த விழிப் புணர்வு செயற்பாட்டில் ஈடுபட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தற்போது இலங்கையில் கொரோ னாத் தொற்று அதிகளவில் பரவிவருகின் றது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை நான் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்றதன் பின்னர் கொரோனா ஒழிப்பு தொடர்பில் பொலிஸாரால் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன

அதன் ஓர் அங்கமாக இன்றைய தினம் யாழ்ப்பாண குடாநாட்டில் மக்கள் முகக் கவசம் அணி தல் தொடர்பான ஒரு விழிப்புணர்வு செயற்பாட்டை மேற் கொண்டு வருகின் றோம்.

வடக்கு மாகா ணத்தைப் பொறுத்த வரைக்கும் கொரோனா தொற் றைக் கட்டுப்படுத்து வதற்குப் பொதுமக் கள் பூரண ஒத்து ழைப்பை வழங்க வேண்டும். அதாவது சுகாதாரத் திணைக்களத்தினரின் சுகா தார நடைமுறைகளைக் கட்டாயமாகப் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும்.

அதாவது சமூக இடைவெளியானது மிகவும் முக்கியமான ஒன்றாகும். தற் போதைய சூழ்நிலையில் பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் கட்டாயமாக சமூக இடைவெளி பேணுதல் வேண் டும்.

அத்தோடு மக்கள் பெரும்பாலும் வீடு களில் இருந்து தங்களுடைய கடமை களைச் செய்கின்றமை மிகச் சாலச் சிறந் தது. எனினும் வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமாக இருந்தால் பொதுமக்க ளின் ஒத்துழைப்புடனே அது சாத்தியமா கும். அத்துடன் வீட்டை விட்டு வெளியில் வரும் போது கட்டாயமாக முகக் கவசம் அணிந்து வெளியில் வரவேண்டும் என வும் வடக்கு மக்கள் தற்கால சூழ் நிலை யில் தங்களையும் தங்களுடைய சமூகத் தையும் பாதுகாக்க வேண்டியது அனை வரதும் பொறுப்பு. - எனவும் தெரிவித் தார்.

# மூன்று வருடங்களுக்கு கொரோனா கொத்தணி

## தொற்று நோயியல் நிபுணர் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, நவ. 04

இலங்கையில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்க ளுக்குக் கொரோனா வைரஸ் தொற் றுடன் தொடர்புடைய கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது.

– இவ்வாறு தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் பொதுச் செயலாளரும் தொற்று நோயியல் நிபுணருமான வைத்தியர் நிஹால் அபே சிங்க எச் சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் இன்று நடத்தப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் செய்தியா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் கூறி யுள்ளார்.

இவ்வாறான அபாய நிலை உள் ளமையால் அது தொடர்பில் தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்து வது அவசியம் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

ஆரோக்கியமான ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்ப டும்போது, அவரது வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்குத் தொற்று ஏற் படும் அபாய நிலை உள்ளது என்றும் நிஹால் அபேசிங்க சுட்டிக்காட்டி யுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை குறித்து அனைவரும் மிகவும் அவ தானத்துடன் இருக்க வேண்டும் என் றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொரோனாவால் மற்றுமொரு வயோதிபர் பரிதாப உயிரிழப்பு

கொழும்பு, நவ. 04

இலங்கையில் கொரோனா வைர ஸினால் பீடிக்கப்பட்டு மற்றுமொரு வயோதிபர் உயிரி ழந்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றுவந்த கொழும்பு 13, கொட்டாஞ்சேனையில் வசிக்கும் 78 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் கொரோனாப் பலியெடுத்த மொத்த உயிர்களின் எண்ணிக்கை 24ஆக அதிகரித்துள்ளது.

# அரசை எதிர்ப்பதற்கு அனைவரும் ஒரே அரங்கில் ஒன்றிணையவேண்டும்

## அணி திரட்டுகின்றார் ருவான் விஜேவர்தன



கொழும்பு, நவ.05

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியிடத்தில் பெருமளவான அதிகாரங்கள் உள்ளன. அதேபோன்று அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. இத்தகைய மிகவும் பலம்வாய்ந்த சக்தியை எதிர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக நாம னைவரும் ஒரே அரங்கில் ஒன்றிணைவது அவசியமாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், சுகாதாரப்பிரிவினர் ஒருவிதமாகவும் பாதுகாப்புப்பிரிவினர் வேறொரு விதமாகவும் கருத்துக்களைக் கூறிவருகின்றனர். வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை கட்டாயமாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர்.

எனினும் ஒருவாரத்தில் எவ்வித அறிகுறிகளும் தென்படாவிட்டால் அவர்களை வீடுகளுக்கே அனுப்பிவைக்க முடியும் என்று சுகாதாரப் பிரிவினர் கூறுகின்றனர். இவற்றில் எதனை நம்புவது என்று தெரியவில்லை. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு சரியான நடைமுறையை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் உள்ள எமது கட்சியின் ஆதரவாளர்கள் வழங்குகின்ற தகவல்களின்படி அங்கு நிலைவரம் மிகவும் மோசமாக இருக்கின்றது. அரசாங்கம் வாக்குறுதியளித்தவாறு 5 ஆயிரம் ரூபாவை வழங்கவில்லை. அல்லது தமக்கு நெருக்கமானவர்களுக்கு மாத்திரமே அந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் உணவை பெறுவதில்கூட பெருமளவான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். எனவே, இதுவிடயத்தில் அரசாங்கம் மக்களை முன்னிறுத்தி சிந்திப்பதுடன், அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்கு சுகாதாரத்துறைக்கு சுமார் 200 கோடி ரூபா நிதி குறைவாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி தொடர்பான அமைச்சு என்பவற்றுக்கு சுகாதார அமைச்சை விடவும் அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இவற்றிலிருந்து அரசாங்கம் எதற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது என்பது வெளிப்படுகின்றது.

அண்மையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் வெளியிடப்பட்ட கருத்தைப் பெரிதும் வரவேற்கின்றோம். அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியிடத்தில் பெருமளவான அதிகாரங்கள் உள்ளன.

அதேபோன்று அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது. எனவே, நாம் மிகவும் பலம்வாய்ந்த ஒரு சக்தியையே எதிர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நாம் மாத்திரமன்றி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே மேடையில் ஒன்றிணைவது அவசியமாகும். தற்போதைய அரசாங்கத்தின் வசமுள்ள அதிகாரங்களைப் பார்க்கும்போது எதிர்காலத்தில் நாட்டில் ஜனநாயகம் நிலைபெற்றிருக்குமா என்ற சந்தேகமே எழுகிறது.

அதேபோன்று இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த பலரும் அதற்காக இப்போது வருந்த ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே, எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கு அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து வலுவானதொரு சக்தியை உருவாக்குவது அவசியமாகும்.

மேலும் கடந்த காலத்தில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சீனாவால் பெருமளவில் நிதியுதவி வழங்கப்பட்டது. அந்த நிதி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். கடந்த மார்ச் மாதத்திலிருந்து புதிதாகச் செயற்கை சுவாசக்கருவிகள் எவையும் கொள்வனவு செய்யப்படவில்லை. பி.சி.ஆர் பரிசோதனை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவில்லை. அவ்வாறெனின் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிதியுதவி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

அதுமாத்திரமன்றி 'சுவசரிய' அம்பியூலன்ஸ் வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் செயற்கை சுவாசக் கருவிகளைக் கழற்றி, அவற்றை வைத்தியசாலைகளில் பொருத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அறியமுடிகிறது. அவ்வாறு செய்தால் அவற்றை மீண்டும் அம்பியூலன்ஸ்களில் பொருத்துவது இயலாத காரியமாகும். ஆகவே நாட்டுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி எதற்காகப் பயன்படுத்தப்பட்டது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.

## நிவாரணம் வழங்க அரசால் 730 கோடி ரூபா ஒதுக்கம்!

கொரோனா தொற்று பரவுவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவதற்காக அரசாங்கம் ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 730 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகை ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மினுவாங்கொடை கொத்தணி ஊடாக நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று பரவலடைவதைத் தொடர்ந்து, இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்யத் தயாராகவுள்ளதாகவும் திறைசேரி குறிப்பிட்டுள்ளது.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொடுக்கவும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெற்றுக் கொடுப்பதற்காகவும் இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

## களுபோவில வைத்தியசாலையில் மேலும் இரு தாதியருக்கு தொற்று

கொழும்பு, நவ.05

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் (களுபோவில) மேலும் இரு தாதியர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் ஏழாவது விடுதியில் பணிபுரியும் இரு தாதியர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே களுபோவில போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் மேலும் இரு தாதியர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த வீரர் ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என வெளியான பி.சி.ஆர். முடிவுகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இரு ஒழுங்கு விதிகள் நிறைவேற்றம்!

### செவ்வாய்யன்று நாடாளுமன்ற அமர்வில்

கொழும்பு, நவ.05

மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு ஒழுங்கு விதிகள் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இதில் ஓர் ஒழுங்குவிதி, நாட்டில் மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட வைத்தியராவதற்கு ஆகக்குறைந்தது உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 2(சி) விசேட சித்தி மற்றும் 1 (எஸ்) சாதாரண சித்தி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும்.

எனினும் இந்த யோசனை நடைமுறை சாத்தியமற்றது என நாடாளுமன்றத்தில் தனித்து வாதிட்ட ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசாநாயகவால் சபையில் கடும் நெருக்கடிக்கு ஆளும் தரப்பு தள்ளப்பட்டது.

நேற்றைய விவாதத்தில் உரையாற்றிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இந்த இரண்டு ஒழுங்கு விதிகளும் இதற்கு முன்னரே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்றும், இதன் ஊடாக வைத்தியத் துறையின் தரம் உறுதிப்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியல்ல எழுப்பிய பிரச்சினையொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தின் நியமனம் உரிய விதிமுறைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது எனக் கூறினார். இதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

ரஷ்ய பல்கலைக்கழகங்கள் மூன்றால் வழங்கப்படும் பட்டங்கள் மருத்துவ சபையால் தடைசெய்கின்றமை தொடர்பில் கிரியல்ல எழுப்பிய பிரச்சினைக்குப் பதிலளித்த அமைச்சர், இது தொடர்பில் விரைவில் ஆராய்ந்து அறிவிப்பதாகவும், தற்காலிகமாக அத்தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இந்நிலையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலை சட்டமாக்க சபையில் அனுமதி கேட்ட வேளையில் (மக்கள் விடுதலை முன்னணி) தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக சபையில் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

'ஒவ்வொரு வருடமும் உயிரியல் துறைக்குத் தெரிவாகும் மாணவர்களின் ஆகக் குறைந்த தகுதியில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ற விடயம் உள்ளடக்கக் வேண்டும்', 'ஒரு சட்டம் உருவாக்கப்படும் வேளையில் அது அடுத்த பரம்பரைக்கும் சார்ந்த ஒன்றாகும். எனவே இதனை வெறும் இரண்டு மணித்தியாலத்தில் தீர்மானிப்பது நியாயமானதல்ல.

எனவே இந்த இரண்டு ஒழுங்குவிதிகளையும் நிறைவேற்றாது அமைச்சு சார் ஆலோசனைக் குழுவில் இதுபற்றிக் கலந்துரையாடி திருத்தம் செய்ய வேண்டும்' எனவும் அவர் பரிந்துரைத்தார்.

எனினும், இதற்கு ஆளும் கட்சியினர் இணக்கம் தெரிவிக்காதமையுடன், நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் கலந்துரையாடப்பட்டமைக்கு அமைவாக இரண்டு ஒழுங்கு விதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இதன் பின்னர், அநுரகுமார திஸாநாயக்கவின் எதிர்ப்பையும் குறிப்பிட்டுக் கொண்டு இந்த இரண்டு ஒழுங்கு விதிகளும் நிறைவேற்றப்பட்டன.

# உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு ஒருவார காலத்துக்குள் நிரந்தர தீர்வு!

## விமல் வீரவன்ஸ உறுதி

கொழும்பு, நவ.05

தமது உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு ஒரு வார காலத்துக்குள் நிவாரணத் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. கொரோனா தொற்றுக் காரணமாக சில பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதமையால் தடை அகற்றப்பட வேண்டிய பொருள்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான பட்டியல் நாளையும் நாளை மறுதினமும் தயாரிக்கப்படவுள்ளன. கைத்தொழில் அமைச்சு, சுங்கப் பிரிவு, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை கைத்தொழில் நிறுவகம் என்பவற்றை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும். இதன் பின்னர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்தப் பொருள்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

**பேருந்து, வான், சிறியவகை காவுவண்டி, (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்**

**1.** தவிசாளர், கொள்வனவுக் குழு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களால் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் **(on call/ hiring)** அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக தகுதிவாய்ந்த கம்பனிகள் அல்லது தனி நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் |
|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான் / Passenger Van | 14 - 16 | 04 |
| 1.2 | பிரயாணிகள் வான்/ Passenger Van | 08 - 10 | 03 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து / Passenger Bus | 42 - 54 | 05 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி/ Mini Truck | 02 | 02 |

**2.** விண்ணப்பிக்க தகுதியுடைய கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை நவம்பர் 25ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

**3.** சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

**4.** நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகமைகளை கொண்டிருத்தல் அவசியமானது

- ♦ பதிவு செய்யப்பட்ட கம்பனியாக அல்லது இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்
- ♦ தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்ப்பட்டு இருத்தல் வேண்டும்.
- ♦ குறைந்தது 03 வருடங்கள் வாடகைவாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
- ♦ வருடாந்த வருமானம் கடந்த மூன்று வருடங்களில் குறைந்தது ரூபாய். ஒரு மில்லியனாக **(Rs. 1000, 000) (Rs. One Million)** இருத்தல் வேண்டும்.
- ♦ ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள் கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

**5.** கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத் தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும் அவற்றிற்கான உரிய சான்று ஆவணங்களை விண்ணப்பத்தில் இணைத்தலும் வேண்டும்.

**6.** முழுமையான கேள்விப் பத்திரத்தை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு சேவைக்கட்டண வைப்புப்பணமாக ரூபா 2000.00 இனை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக காசாளரிடம் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் மூலப்பிரதியையும் **(original)** மற்றும் பாதுகாப்பு சேவைக்கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பாதுகாப்புச் சேவைக்கட்டண வைப்புப்பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத கேள்வி விண்ணப்பங்களும் மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**7.** பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மூலப்பிரதி **(Original)**, பிரதி **(Duplicate)** என்று தனித்தனியாக பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வகைக்குரிய வாகனங்களின் வகை தனித்தனியே 'அழைப்பின் பெயரில் **(On Call)** / வடகை **(Hiring)** அடிப்படையில் வாகனம் வழங்குதல்' எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச்சபை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடம் 25.11.2020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இ - 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 25.11.21020ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**8.** கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு **(Bid security)** வைப்புப் பணமாக ரூபா 15000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 25.03.2021ம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்புவைப்புச் சான்றிதழ் ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனைக் குறித்துக் கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு:- **பிரதிப் பதிவாளர்/ பொதுநிர்வாகக் கிளை - Tele: 021 2226517, Fax:- 021 2226517.**

**தவிசாளர்**
**கேள்விச்சபை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**


## இசுறுபாய கல்வி அமைச்சகத்தை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை!

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட பத்தரமுல்ல பகுதியில் உள்ள கல்வி அமைச்சகம் இன்று (வியாழக்கிழமை) முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் பகுதிக்குக் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் வந்து சென்றுள்ளமை கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்து இசுருபாய கட்டடம் நேற்றுமுன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டது.

மேலும், குறித்த கட்டடத்தில் தொற்று நீக்கும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டவுடன், மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமையை அடுத்து, கல்வி அமைச்சகம் இன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனாவில் இருந்து 227 பேர் மீண்டார்கள்!

கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 227 பேர் முழுமையாகக் குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து முழுமையாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 858 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரையில் 12ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 5 ஆயிரத்து 858 பேர் குணமடைந்துள்ள நிலையில் 6 ஆயிரத்து 200 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், இந்த தொற்றுக்கு உள்ளான 24 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் கைதிகள் 43 பேரை திருப்பி அனுப்ப நடவடிக்கைகள்

இலங்கையில் போதைப்பொருள் தொடர்பான பல்வேறு குற்றங்களுக்குத் தண்டனை பெற்று வந்த 43 பாகிஸ்தான் கைதிகளை அந்நாட்டின் அரசின் வேண்டுகோளின் பேரில் இலங்கையிலிருந்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை உயர்நீதிமன்றத்தின் உத்தரவில் 10 முதல் 15 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்த பாகிஸ்தான் பிரஜைகளே நேற்று (புதன்கிழமை) அவர்களின் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்தனர்.

கைதிகளை அழைத்துச் செல்வதற்காக 86 பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினரின் சிறப்பு விமானம் புதன் இரவு 10.50 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த நிலையில், சிறைச்சாலை திணைக்களத்துக்குரிய பஸ்களில் அந்த பாகிஸ்தான் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அத்துடன், இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் அதிகாரிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர்.

இதனையடுத்து பாகிஸ்தான் பிரஜைகளை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுடன் அந்நாட்டுக்கு அனுப்பிவைக்க குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. குற்றவாளிகளை மாற்றுவதற்காக 2004 இல் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் கைதிகள் திருப்பி அனுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - இந்திய...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு அதிர்ந்துபோனது.

இன்றுபோலவே அது தங்களது சுதந்திரத்துக்கும் இறையாண்மைக்கும் சவால் விடும் செய்கை என்று கொதித்தது. ஆனால், இந்தியா அந்த ஏற்பாட்டை செஞ்சிலுவைச்சங்க கொடிகளுடன் ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பியது. அது இலங்கை அரசினால் தடுக்கப்பட்டது.

ஆறுமணிநேரம் அந்தக்கப்பல் கடலில் நிலைகொண்டும் அனுமதி மறுக்கப்பட்டதால் திரும்பியது. இலங்கை அரசு வெற்றி முரசம் கொட்டியது இந்தியாவுக்கு கோபம் எகிறியது.

இந்தியா அன்றே இந்தியாவிலிருந்த இலங்கைத்தூதுவர் பேர்ணாட் திலகரத்தினாவை அழைத்து, அன்று மாலை 3.30 மணிக்கு மேல் தாங்கள் வானத்திலிருந்து உணவுப்பொதிகளை போடுவோம் என்று சொன்னது. அதற்கு அவரும் இது எங்களது இறையாண்மைக்குச் சவால், அத்துமீறல் என்று வாதாடினார்.

ஆனால், இந்திய விமானங்கள் இலங்கை எல்லைக்குள் பறந்து வடக்கில் உணவுப் பொதிகளை வீசின. முதலாவது 'ஒப்பரேஷன் பூமாலை' என்றும் அடுத்தது 'ஒப்பரேஷன் கழுகு' என்றும் வர்ணிக்கப்பட்டன.

புலிகளும் வடமராட்சி மீதான தாக்குதல்களினால் பின்வாங்கி சுதுமலை பிரதேசங்களுக்கு வந்தனர். யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள் அகதி முகாம்களாயின. தமிழ் இளைஞர்கள் வடமராட்சியில் கொத்துக்கொத்தாகப் பிடிக்கப்பட்டு, கப்பலில் ஏற்றப்பட்டு இலங்கையின் தென் பகுதிகளுக்கு கொண்டுவரப்பட்டனர். அதனை நிறுத்துமாறு கேட்டும் அன்றைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி அதற்கு இணங்கவில்லை. தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையோடு சர்வதேச தமிழ் சமூகத்தினர் வடமராட்சிக்குச் சென்று அகதி முகாம்களில் உதவி செய்யவும், தென்பகுதிக்கு பிடித்துச்செல்லப்பட்ட இளைஞர்களை பராமரித்து அவர்களது இயக்க ஈடுபாடுகளை தெளிவுபடுத்தி விடுதலை செய்யவும் அனுமதி கேட்டோம்.

அது பற்றிய பேச்சுவார்த்தைக்கு யார் யார் வருவது என அத்துலத் முதலி தகவல் கேட்டார். ஆனால், பின்னர் வருபவர்களில் பலர் புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி டெல்லிக்கு அறியத் தந்தோம். இந்திய வெளியுறவு செயலாளர், தமிழ் இளைஞர்களை வடக்கிலிருந்து தென்பகுதிக்கு கப்பல்களில் அனுப்புவதை நிறுத்துமாறு கேட்டார். ஆனால், லலித் அத்துலத் முதலி அதற்கு இணங்கவில்லை. உடனடியாக இந்திய படைக்கப்பல் ஒன்று வடமராட்சி கடல் பகுதியில் நிறுத்தப்பட்டு எந்தவொரு கப்பலும் இளைஞர்களுடன் செல்ல முடியாது என்று கண்டிக்கப்பட்டது.

நிலைமை கட்டுமீறவே ஜே.ஆர். பணிந்து ஓர் ஒப்பந்தத்திற்கு தயாரானார். அவரைப் பொறுத்தளவில் ஆயுதப்போராட்டத்தால் சிங்கள மக்களின் உயிரிழப்புகளும் படையினரின் சாவும் பெரிய சவாலாக இருந்தது. இதற்கு இந்தியாவின் பின்னணி உண்டு என்பது அவர் அறிந்ததே. நாடாளுமன்ற பேச்சுக்களால் அவர் மருண்டுவிடவில்லை. ஆனால், ஆயுதப் போராட்டத்தை ஒழிக்கவும் அதற்காக வடக்கு – கிழக்கு இணைந்த ஒரு நிர்வாக அலகை காணி – பொலிஸ் அதிகாரத்துடன் தருவதற்கு இணங்கினார். அவை நடக்கும் வரையில் மேலும் இந்திய கப்பல்கள் யாழ்ப்பாணம் வரையில் சென்று உதவிகளை விநியோகிக்கவும் அனுமதித்தார்.

ஆனால், ஜே.ஆருக்கு எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை. பிரேமதாசா, ரணில், லலித் அத்துலத் முதலி, காமினி ஜயசூரியா போன்றோர் அவருக்கு எதிராக படைகளுடன் சேர்ந்து அவரை கவிழ்த்து விடுவதற்கு முஸ்தீபுகள் நடக்கின்றன என்ற செய்தி வந்ததும், இந்தியா வெளிப்படையாகவே அவ்வாறு ஏதும் நடந்தால் ஜே.ஆரை பாதுகாக்க இந்தியா நேரடி நடவடிக்கையில் இறங்கும் என்று அறிவித்து இன்னுமொரு ஆயுதக் கப்பலை கொழும்பு நோக்கி நகர்த்தியது.

அதனோடு அந்த சிக்கல் அடங்கியது.

இவ்வளவு பேச்சுவார்த்தைகளும் புரளிகளும் பூச்சாண்டிகளும் இல்லாமல் பலர் எண்ணுவதுபோல் திடுதிப்பென்று இலங்கை – இந்திய ஒப்பந்தம் முளைத்து திணிக்கப்படவில்லை.

தனது பிராந்திய நலன் முன்னணியில் இருந்தாலும் அதனுள் தமிழர் சார்ந்து, அவர்களின் அனுசரணையாகவே இந்தியா நின்றது.

வடமராட்சி சம்பவ காலத்தில், நான் அவுஸ்திரேலியாவிலிருந்தும் கந்தசாமி லண்டனிலிருந்தும் டெல்லியில் அமிர்தலிங்கத்துடனும் சிவசிதம்பரத்துடனும் தினமும் மாறி மாறி தொலைபேசியில் உரையாடியவாறு இருந்தோம்.

இந்தியத் தூதுவர் ஜே.ஆருடன் நடத்திய உரையாடலில் அவர் வடக்கு – கிழக்கை இணைக்கவும் அதனை தமிழர் பிரதேசமாக ஏற்றுக்கொண்டமையை தெரியப்படுத்தியும் மாகாண சபைகளுக்கு பரந்தளவில் அதிகாரப் பகிர்வு தரப்படும் என்பவை பற்றி உரையாடி, புலம்பெயர் தமிழர்களுக்கு இவ்வளவிலாவது இந்தியப்படையின் பாதுகாப்போடு அரசியல் அதிகாரமும் புனர்வாழ்வும் பெறுவதற்கு சம்மதமுண்டா என்று அமிர்தலிங்கம் கேட்டார்.

அவர் கேட்டது இன்றும் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. "ஓம் அண்ணை தயங்காமல் செய்யுங்கோ, இல்லாவிட்டால் வடமராட்சியின் அபத்தம் பெரிய வினையாகும்"– என்று நாங்கள் ஆமோதித்தோம். ஆனால், கூட்டணி மட்டுமல்ல எல்லா விடுதலை இயக்கங்களையும் உள்வாங்குமாறு கேட்டுக்கொண்டோம்.

ஆயின், அவர்கள் மற்றவர்கள் சம்மதப்பட்டாலும், புலிகள் மற்றவர்களுடன் சேர்ந்து அமர்ந்து பேச மறுக்கிறார்கள். அச்சமயம் இந்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த நரசிம்மராவ், தமிழ்ப்பகுதிக்காக கூட்டணியோ அல்லது எல்லா இயக்கங்களோ கையெழுத்து வைப்பதை விரும்புகிறார். ஆனால், எங்களால் தான் ஒற்றுமையாக இயங்க முடியாதிருக்கிறது என்று கவலைப்பட்டார்.

ஏனைய இயக்கங்கள் யாவும் தடைசெய்யப்பட்டதால் புலிகள் தாம்தான் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலைப்பாட்டில் இருந்தனர். அச் சமயம் இந்திய தூதரகத்தின் முதல் செயலாளராக இருந்த ஹர்திப்சிங்பூரி, வடமராட்சிக்கு நிக்கோ ரேட் (Nico Trade) என்ற கப்பலில் வந்த இந்திய உதவிகளின் விநியோகத்தை மேற்பார்வை செய்யச்சென்ற போது, பிரபாகரனைச் சந்தித்து, ஜே.ஆரோடு நடந்த பேச்சுவார்த்தைகளையும் இணக்கங்களையும் தெளிவுபடுத்தி, இந்தியா சென்று மற்றவர்களோடு இணைந்து பணியாற்றுமாறு சொல்லியிருக்கிறார் என்னும் விவரத்தையும் அமிர்தலிங்கம் கூறினார்.

பின்னர் இந்த ஹர்திப்சிங்பூரிதான் பொறுப்பில் நின்று பிரபாகரனை இந்திய விமானத்தில் ஏற்றி அனுப்புவதற்கான ஒழுங்குகளை செய்தார். அவ்வாறு டெல்லி செல்லும் வழியில் பிரபாகரன் எம்.ஜி.ஆரைச் சந்திக்கத் தீர்மானித்து சந்தித்தார். இருவருக்குமிடையே நீடித்த பனிமூட்டம் அகலவில்லை. ஆனாலும், எம்.ஜி.ஆர். தானறிந்த வரையிலும் தனக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின்படியும் இந்தியப் படைகள் பாதுகாப்பிற்குச் செல்லும், நடப்பவைகளை ஒரு படியாக கருதி டெல்லியோடு சேர்ந்து இணக்கமாக நடக்குமாறு அறிவுறுத்தினார்.

பிரபாகரன், டெல்லி சென்றடைந்ததும் அவர் தனிமைப்படுத்தப்பட்டார், நிர்ப்பந்திக்கப்பட்டார் என்றும், இல்லை, அவரை முன்னர் ராஜீவுக்கு வாக்களித்தவாறு ஒப்பந்தத்தை ஏற்று இணைந்து நடக்குமாறு கோரப்பட்டார் என்றெல்லாம் பலவிதமான அபிப்பிராயங்கள் பின்னால் பேசப்பட்டன.

அதைப்பற்றி, சம்பந்தப்பட்டவர்கள் பல பேர் தங்களது பங்கும் பணியும் பற்றி எழுதியுள்ளார்கள். ஆகவே அதுபற்றி நான் விஸ்தரிக்கவில்லை. விமர்சிக்கவும் இல்லை.

ஆயினும் ராஜீவ் இலங்கை செல்லு முன்னரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு வந்த பிறகும் பிரபாகரனை சந்தித்தார். அந்த சந்திப்பில் விடுதலை வீரர்கள் தமிழ்ப்பிரதேசங்களின் காவல் படைகளில் உள்வாங்கப்படுமட்டும் அவர்களின் பராமரிப்புக்கான தொகைக்காக பேச்சுவார்த்தை நடந்து அது நிர்ணயிக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தைகளில் பண்ருட்டி ராமச்சந்திரன், எம். ஜி. ஆரின் அறிவுறுத்தலில் பங்குபற்றினார்.

அதன்பின் ஆயுத கையளிப்பை பற்றிய நிலை எழுந்தபோது, யாழ்ப்பாணத்தில் புலிகள், முதலில் பிரபாகரன் இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டால்தான் அதைப்பற்றி பேசலாம் என்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதால், அவர் இந்தியப் படைக்கு பொறுப்பாக இருந்த சில தளபதிகளை சென்னையில் சந்தித்துவிட்டு யாழ்ப்பாணம் திரும்பினார்.

அப்பொழுது பிரபாகரனோடு நடந்த புரிந்துணர்வுகளை ராஜீவ் எழுத்தில் எடுக்கவேண்டும் என்று மீண்டும் அறிவுறுத்தப்பட்டாலும் தனக்கு நம்பிக்கையுண்டு என்று ராஜீவ் அதை நாடவில்லை.

(தொடரும்)

# தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு யாழில் நிவாரணங்கள் வழங்கல்!

## அரச அதிபர் அறிவிப்பு



யாழ். மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கான ஐயாயிரம் ரூபா நிவாரணப் பொதி நேற்று முதல் விநியோகிக்கப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

இந்த நிவாரணப் பொதிகள் அந்தந்தக் கிராம சேவகர்கள் ஊடாகத் தனிமைப்படுத்தலில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளோரின் தரவுகள் கடந்த முதலாம் திகதி உரிய செயலணிக்கு அனுப்பப்பட்டு இரண்டாம் திகதி நிவாரணம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்தது.

எனவே, முதற்கட்டமாக யாழ். மாவட்ட 15 பிரதேச செயலக பிரிவுகளில் சுயதனி மைப்படுத்தலில் உள்ள 509 குடும்பங்களுக்கு இன்றிலிருந்து நிவாரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன என அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணியவர்கள் என இன்றைய நிலைவரப்படி 772 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 700 பேர் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பல்கலைக் கழகங்களில் 10 ஆயிரம் மாணவர்கள் மேலதிகமாக இணைப்பு

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் இந்த வருடம் மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடத்தில் பல்கலைக் கழக பிரவேசத்தில் உள்வாங்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரம் ஆகும்.

இந்த நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சம்மிக்க நாடு என்ற தொலை நோக்கின் கீழ் இம்முறை 41 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இதற்கமைவாக கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை மருத்துவ பீடத்துக்கு 371 மாணவர்களும், பொறியியல் பீடத்துக்கு 405 மாணவர்களும், சட்ட பீடத்துக்கு 126 மாணவர்களும், உயிரியல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் தொழில்நுட்ப பீடத்துக்கு 350 மாணவர்களும் என்ற அடிப்படையில் மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முகாமைத்துவ பீடத்துக்கு 900 மாணவர்களும், கலைப்பீடத்துக்கு 815 மாணவர்களும், விவசாயம், விஞ்ஞானம் உள்ளிட்ட ஏனைய பட்டப்படிப்புக்கற்கைநெறிகளுக்காக 6 ஆயிரம் மாணவர்களும் இம்முறை கூடுதலாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க பல்கலைக்கழக அனுமதி தொடர்பிலான மேல்முறையீடு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக அல்லது www. ugc.ac.lk என்ற மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

உயர்நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாகவும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானத்துக்கு அமைவாகவும் முடிந்த வரையில் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் கொள்கைக்கு அமைவாகவும் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 10 ஆயிரம் மாணவர்களை இணைத்துக் கொள்ள நாம் நடவடிக்கை மேற்கொண்டோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சகல பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்ட செயலாளர்கள், மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி, பொலிஸார் மற்றும் கடற்படைத் தளபதி ஆகியோர் கலந்துகொண்டனர். இதன்போது ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி, எமது நாட்டின் பொருளாதார நடவடிக்கைளை இலக்காக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய முறைகளைத் தீர்மானிக்கவேண்டும்.

அத்துடன் அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவையாளர்கள், சுகாதாரத் துறையினர் மற்றும் பொலிஸாரை ஒன்றிணைத்துக் கொரோனாத் தடுப்பு சுகாதார வழிகாட்டல்களை முறைப்படி கடைப்பிடித்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வைத்தியசாலைக் கழிவுகளை அகற்றும் முறை தொடர்பாக பொதுவான ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அத்துடன் மாணவர்களிடையேயும் கொரோனா சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

அரச மற்றும் தனியார் பஸ்களில் பதிவு செய்யப்பட்ட குறித்த பஸ்ஸின் இலக்கத்தை உட்புறத்தில் கட்டாயமாகக் காட்சிப்படுத்த வேண்டும். பயணிகள் தாம் பிரயாணம் செய்யும் பஸ்ஸின் இலக்கத்தை இலகுவாகக் குறித்து வைக்க வேண்டும்.

கடந்த காலங்களை விட தற்போது வடக்கு மாகாணத்தில் வீதி விபத்துக்கள் பெருமளவு குறைவடைந்துள்ளன. வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் சட்டரீதியாக கடைப்பிடிக்கப்படுகின்றன. இதனைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்திய பொலிஸாருக்கு எனது பாராட்டுக்கள்.

சட்ட ரீதியற்ற முறையில் நடைபெறும் மண் அகழ்வு மற்றும் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்கும் உரிய சட்ட நடவடிக்கைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மருதனார்மடம் சந்தை இட ஒதுக்கீட்டு விவகாரம் வியாபாரிகளுடன் மணிவண்ணன் கலந்துரையாடல்



வலி. தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட மருதனார்மடம் பொதுச்சந்தையின் புதிய கட்டடத் தொகுதியில் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீட்டில் காணப்படும் முரண்பாடு தொடர்பில் இன்று (புதன்கிழமை) கலந்துரையாடப்பட்டது.

மருதனார்மடம் பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சந்தைக் கட்டடத் தொகுதியில் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடு தொடர்பில் கடந்த இரண்டு வாரங்களாக வியாபாரிகளால் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், வலி தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் லகிந்தன், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மனிப்பாய் பிரதேச அமைப்பாளர் வீரா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் சந்தை வியாபாரிகளுடன் நேற்று கலந்துரையாடினர்.

பிரதேச சபையால் வழங்கப்பட்ட இருக்கும் இடத்தின் அளவீடு தமது வியாபார நடவடிக்கையை முன்னெடுப்பதற்குப் போதுமானதாக இல்லை என வியாபாரிகள் குற்றஞ்சாட்டினர்.

வியாபாரிகளின் பிரச்சினை தொடர்பில் சபையின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் தவிசாளரால் தீர்வு கிடைக்காவிடின் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் தீர்மானிப்பது எனவும் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

# மருந்துகளை வீடுகளுக்கு வழங்க மட்டக்களப்பில் நடவடிக்கைகள்!

கொழும்பு, நவ.05

தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நிலைமை காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாக மருந்துகளைப் பெற்றுக் கொள்ளும் கிளினிக் நோயாளர்களுக்குரிய மருந்துகளை நோயாளர்களின் வீட்டுக்கே கொண்டு சேர்ப்பிப்பதற்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவைக்காக திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், கிளினிக் இலக்கம், சிகிச்சையளிக்கும் வைத்திய நிபுணரது பெயர், நோயாளர்கள் வசிக்கும் கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலளார் பிரிவு என்பனவற்றைத் தெளிவாகத் தெரிவித்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நோயாளர்கள் தமக்கான மருந்துகள் முடிவடைந்ததும் வைத்தியசாலையின் 065 3133330 அல்லது 065 3133331 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இந்த விவரங்களை வைத்தியசாலை நிர்வாகத்துக்குத் தெரிவித்து தமக்கான மருந்துகளை வீடுகளிலிருந்தவாறே பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கடலுக்கடியில் காணப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்ற நடவடிக்கைகள்!

திருகோணமலை கடல் பிராந்தியத்தில் கடலுக்கடியில் காணப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் திட்டம் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனை காரணமாக கடலில் ஏற்பட்டுள்ள இந்த மாசு பொருள்களை அகற்றும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

மிதக்கும் கடல் பிளாஸ்டிக் கழிவு போலல்லாமல், பெரும்பாலும் கடல் பிளாஸ்டிக் குப்பைகள் கடலுக்கு அடியில் தங்குகின்றமையால் அவற்றை சுழியோடல் நடவடிக்கைகள் மூலமே எடுக்கப்பட வேண்டும்.

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் குப்பைகள் பாரமற்றவையாக இருக்கின்றமையால், அவை கடலோரத்தில் பரவி சிக்கிக் கொள்கின்றன.

கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடற்பறவைகள் என்பவற்றின் சமிபாட்டுத் தொகுதியில் பிளாஸ்டிக் பொருள்கள் சிக்கிக்கொள்வதால் அவை பெரும்பாலும் உயிரிழக்கின்றன. இதேவேளை, சில ஈரூடக வாழி இனங்கள் தங்கள் ஆயுட்காலத்தில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளால் பாதிக்கப்படுகின்றன.

எதிர்கால சுற்றுச்சூழல் பேரழிவை மனதில் இருந்தி, கடலோரப் பகுதியின் தூய்மையை உறுதிப்படுத்துவதற்கும் நாட்டைச் சூழவுள்ள கரையோரங்களின் தூய்மையைப் பேணவும், கடல் சுற்றுச்சூழல் மற்றும் அதன் உயிரியல் பல்வகைமைகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்கவும் இந்த வகையான திட்டங்கள் கடற்படையினரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தைத் திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரம் முதல் கடற்கரை வரை முன்னெடுக்க கிழக்கு கடற்படை கட்டளையகம் எதிர்பார்த்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது கிழக்கு கடற்படை கட்டளையகத்தின் சுழியோடும் படைவீரர்களால் பெருமளவிலான கடல் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் குப்பைகள் அகற்றப்பட்டன.

கரையோரங்களைச் சுத்தப்படுத்தும் இந்த நடவடிக்கையில் திருகோணமலை பொலிஸ் குழுவினரும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.


கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1985.06.21 | பிறந்த திகதி – 1996.09.17 |
| மதம் – இந்து V | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – பூசம் | நட்சத்திரம் – சுவாதி |
| பாவம் – 13 | பாவம் – 38 1/2 |
| சூரி/ செவ் – 11 இல் | கல்வி – O/L |
| கல்வி – நில அளவை | தொழில் – கடை |
| தொழில் – நிலஅளவையாளர் | எதிர்பார்ப்பு – சாதாரண மணமகன் தேவை. |
| எதிர்பார்ப்பு – படித்த அழகான உத்தியோகப் பெண். | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528



விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி
•டென்மார்க்
•நெதர்லாந்து
•இத்தாலி
•சுவிஸ்
1150/= Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240



லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் விசா
இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இன்னும் 04 நாட்களே
2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிர்ஷ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்ந்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0768226243 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |

V2 Travels 0768226244



M.E.S பார்சல் சேவை
ஊரடங்கு நேரத்திலும்...
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இருந்து கொழும்பு - கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை ஆகிய இடங்களுக்கு ஊரடங்கு நேரத்திலும் உணவுப் பொருட்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள், பொதிகள் அனுப்பும் சேவை நடைபெறுகின்றது.
M.M.B Building A9 road, Old bus stand, Kilinochchi.
No.46, College road, Jaffna.
வெளிநாடுகளிலிருந்து இணைய வழியாக தொடர்பு கொள்ள +94777517019
தொடர்புகளுக்கு: 076 990 3611 076 990 3618


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020




கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

விளம்பர அனுசரணை:- காலைக்கதிர் Kalaikkathir